# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/= | இதழ் - 28 | 23.07.2023




நல்லூர்த் தேர்த் திருவிழா 02

தேனீக்களின் வாழ்விடத்தைப் பாதுகாத்து ... 12

நெல் உற்பத்தியை மேம்படுத்த 300 .... 21

# கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணையம்


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# நல்லூர்த் தேர்த்திருவிழா!

# வடக்கின் சுற்றுலாத் துறைக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமா?

**சுதாகரன் பேரம்பலம்**



> “நல்லூர்த் திருவிழா சார்ந்து தமிழ் நாட்டு மக்களை சுற்றுலாவுக்காக ஈர்க்கும் திட்டம் ஒன்று முயற்சிக்கப்படும் ஆயின் அதற்கான வரவேற்ப்பு அதிகமாக இருக்கும், அதை சரியான சந்தைப்படுத்தல் திட்டத்துடன் உடன் இணைக்கும் போது நல்ல பலன் கிடைக்கலாம். சில முயற்சியாளர்கள் உள்ளே நுழைந்து இலாபம் பார்க்கும் சந்தர்ப்பத்தில் அதன் நன்மை கச்சான் விற்கும் ஆச்சிக்குக் கூடக் கிடைக்கும்”

நல்லூர்த் தேர்த்திருவிழாக்கு இன்னும் ஒரு நாற்பது நாட்கள் தான் இருக்கின்றன. இலங்கையில் அதிகம் மக்கள் குவியும் விழாக்கள் எது என்று கேட்டால் நல்லூர் இரண்டாம் மூன்றாம் இடங்களில் இருக்கலாம். இம்முறை கதிர்காமத்துக்கு ஐந்து லட்சம் மக்கள் வந்ததாகக் கூறுகிறார்கள். நீண்ட இடைவெளியின் பின் கதிர்காமத்து வீதிகள் சனக்கூட்டத்தில் நிறைந்திருந்தது. கண்டி எசல பெரஹரவுக்கும் பெருமளவு சனம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

கொவிட், பொருளாதார நெருக்கடி அதனைத் தொடர்ந்து வந்த எரிபொருள் நெருக்கடி என்று கடந்த காலங்கள் மக்கள் துணிந்து வெளியில் இறங்குவதற்கு அச்சப்பட்ட காலங்களாக இருந்தன. இப்போது நாட்டு நிலைமை உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும் அல்ல பெருமளவில் வெளிநாட்டு பயணிகளும் வரும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. மூன்று நான்கு வருடங்களாகச் சோர்ந்து போய் இருந்த பக்தர்களுக்கு ஒரு உத்வேகம் கிடைத்து இருக்கிறது.

வடக்கு பொருளாதார ரீதியாக துரிதமாக முன்னேற வேண்டும் என்றால் ஒன்று புதிதாக ஒரு பொருளையோ சேவையையோ ஏற்றுமதி செய்ய வேண்டும். இல்லாவிடில் சுற்றுலாத்துறை ஊடாக வருமானம் ஈட்ட வேண்டும். உள்நாட்டு சந்தையை மையப்படுத்திய விவசாயம், தொழில்துறை போன்ற மற்றய துறைகள் வளர வேண்டும். ஆனால் அவை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. சுற்றுலாத் துறையில் கூட அனுபவம் சார்ந்த சுற்றுலா (experiencial tourism), புனித யாத்திரைச் சுற்றுலா (philgrimage tourism) இரண்டும் வடக்கு போன்ற பகுதிக்குப் பொருத்தமானதாக இருக்கும்.

உலகிலேயே இந்தியா புனித யாத்திரை சுற்றுலாவில் முன்னிலை வகிக்கும் ஒரு நாடு ஆகும். 2022 ஆம் ஆண்டில் மட்டும், இந்தியா வியக்க வைக்கும் வகையில் 1,433 மில்லியன் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் புனித யாத்திரை மேற்கொண்டுள்ள நிலையில், 6.64 மில்லியன் வெளிநாட்டினர் நாட்டின் புனிதத் தலங்களுக்குச் சென்றுள்ளனர். காசி, இராமேஸ்வரம், திருப்பதி போன்ற இடங்கள் சுற்றுலாப் பயணிகளுக்குத் தகுந்த வகையில் மாறுதல் அடைந்து வந்திருக்கிறது. அதற்கான உட்கட்டமைப்புச் சரியாகத் திட்டமிடப்பட்டு செய்யப்படுகிறது.

நல்லூர்த் திருவிழா என்பது சுற்றுலாத் துறைக்கு எம் கண் முன்னால் இருக்கும் மிகப் பெரிய வாய்ப்பு. எமக்கு அருகிலேயே தமிழ்நாடு இருக்கிறது. கடந்த முறை நல்

லூர்த் திருவிழா இந்திய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து இருந்தது. நல்லூர் பற்றிய Behindwoods இன் வீடியோவினை ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பார்வையிட்டு இருந்தனர்.

வடக்கில் உள்ள நாங்கள் யாருமே தமிழ்நாட்டை ஒரு வணிக வாய்ப்புக்கான சந்தையாகவோ, முதலீட்டாளராகவோ பார்ப்பதில்லை. இலங்கை மக்கள் கஷ்டப்பட்டால் அரிசியும், பருப்பும் தரும் நாடாகத்தான் பார்த்து இருக்கிறோம்.

தமிழ் நாட்டில் இருக்கும் இருக்கும் நிறைய பேருக்கு ஒரு தடவையாவது யாழ்ப்பாணத்துக்கு வர ஆசை இருக்கும். அதற்கான வழி ஏற்படுத்த வேண்டும். பல பேருக்குச் சென்னையில் இருந்து நேரடியாகவே பலாலிக்கு வரலாம் என்பதே தெரியாமல் இருக்கும். யாழ்ப்பாணம் தமிழ் நாட்டு மக்களுக்கு அருகிலேயே இருக்கும் ஒரு சர்வதேசச் சுற்றுலா நகரமாக இலகுவாகவே அடையாளப்படுத்தமுடியும். நல்லூர் திருவிழா என்ற நிகழ்வு அவர்களை சுண்டி இழுப்பதற்குப் போதுமான வலுவை வழங்க முடியும்

ஒரு சீசனுக்குச் சுமார் 20,000 சுற்றுலாப் பயணிகளை கொண்டு வரமுடியும் என்பதை குறிக்கோளாய் வைத்து, ஒரு சுற்றுலாப் பயணிச் சராசரியாய் 100,000 ரூபாய்களை செலவு செய்தால் கூட 2 பில்லியன் வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம். அதில் 30% பணம் சுற்றுலா சார்ந்த பொருளாதார நடவடிக்கையில் இருக்கும். சாதாரண மக்களுக்குப் போய்ச் சேர்ந்தால் கூட 600 மில்லியன் ரூபாய்கள் அவர்களின் கைகளுக்கு கிடைத்து வாழ்க்கைத் தரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம். அதுவும் வெறும் 25 நாட்களில். இது ஒரு குறைந்த பட்ச மதிப்பீடுத் தொகை தான்.

Visitnallur இதை ஒரு வியா பாரக் குறி (பிராண்ட்) ஆக உருவாக்கி விளம்பரப்படுத்தினால் பெரும் வாய்ப்பு உண்டு. அரசோ, வேறு யாருமோ வந்து எமக்காக செய்து தரப் போவதில்லை. ஒரு வேளை சுற்றுப்பயண ஆபரேட்டர்கள், பயண முகவர்கள், ஹோட்டல்கள், விமான நிறுவனங்கள், சிறு முயற்சியாளர்கள்,





வடக்கு மாகாண சுற்றுலாத் துறை என்பன சேர்ந்து இயங்கக் கூடிய வாய்ப்பு இருந்தால் அதற்கான பெறுபேறு பிரகாசமாக இருக்கும்.

நல்லூர்த் திருவிழா சார்ந்து சுற்றுலாத் துறையை எப்படி மேம்படுத்தலாம் என்பதற்கான சில யோசனைகள்.

நாலைந்து சுற்றுலா நிறுவனங்கள் தமிழ் நாட்டு மக்களைக் குறிவைத்துச் சுற்று லாப்பயண பேக்கேஜ்களை வடிவமைக்க வேண்டும்.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஊடாக அதை தமிழ் நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கலாம்

தமிழ் நாட்டில் கோவில் குளம் போகின்ற, மலை ஏறுகின்ற யூடிப் சேனல் நடத்துபவர்களை இங்க வந்து நல்லூர்த் திருவிழாவை பாருங்கள் என்று கூப்பிடலாம்.

பெரிய மீடியாக்களுக்கு, வாரப் பத்திரிகைகளுக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

இரண்டு மூன்று பெரிய பிரசித்தமான நபர்களைச் சுற்றுலாவுக்காக வரச் செய்ய முயற்சிக்கலாம்.

மேலே கூறிய கேள்வியை அதிகரிக்கும் காரணிகளுக்கு அப்பால்பட்டு, ஒரு சுற்றுலா சார்ந்த விடயத்தை ஊக்குவிக்கும் பொது அது சார்ந்த உட்கட்டமைப்பு அம்சங்கள் முறையாக ஏற்படுத்தப்படவேண்டும். முறையான போக்குவரத்து வசதிகள், ஆடம்பர / பட்ஜெட் பயணிகளுக்கு ஏற்றவாறான ஹோட்டல் / homestay போன்ற தங்குமிட வசதிகள் ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்படும். நல்லூரைச் சுற்றியுள்ள, யாழ்ப்பாணத்தில் உள்ள மற்றைய சுற்றுலா இடங்களும் மேம்படுத்தப்பட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான திட்டத்தில் உள்ளடக்கபடலாம். அதே சமயத்தில் சுற்றுலா பயணம் சார்ந்த பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளோரின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும்.

நல்லூர்த் திருவிழா சார்ந்து தமிழ் நாட்டு மக்களை சுற்றுலாவுக்காக ஈர்க்கும் திட்டம் ஒன்று முயற்சிக்கப்படும் ஆயின் அதற்கான வரவேற்பு அதிகமாக இருக்கும், அதை சரியான சந்தைப்படுத்தல் திட்டத்துடன் உடன் இணைக்கும்போது நல்ல பலன் கிடைக்கலாம். சில முயற்சியாளர்கள் உள்ளே நுழைந்து இலாபம் பார்க்கும் சந்தர்ப்பத்தில் அதன் நன்மை கச்சான் விற்கும் ஆச்சிக்குக் கூடக் கிடைக்கும். யாழ்ப்பாண பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையின் ஊடாக வருமானம் வந்து அது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணலாம் . இது பல தரப்புக்களின் முயற்சியிலேயே ஏற்படுத்த முடியும். ஊர் கூடினால் தேர் இழுக்கலாம்



**எழுத்தாளர் பற்றி**

**சுதாகரன் பேரம்பலம் ஒரு சமூகப் பொருளாதார ஆய்வாளர். 10 வருடங்களுக்கும் மேல் உலகின் முன்னணி ஆய்வு நிறுவனங்களின் மார்க்கெட் ஆய்வுகளை மேற்கொண்ட அனுபவம் வாய்ந்தவர். தற்போது கொழும்பில் Sparkwinn Research என்ற மார்க்கெட் ஆய்வு நிறுவனத்தினை நடத்தி வருகிறார். பொருளாதாரம், உலக நடப்புகள் மக்களின்**

**நுகர்வோரின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாகத் தொடர்ச்சியாக எழுதி வருகிறார்.**

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## உல்லாசப் பயணத்துறையும் பொருளாதார நெருக்கடியும்

நாட்டில் கடந்த வருடம் உருவாகிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான வழிகளில் ஒன்றாக உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிப்பதில் அரசாங்கம் கவனத்தைச் செலுத்தியிருக்கின்றது. அதிகளவுக்கு அந்நியச் செலாவணியை உடனடியாகப் பெற்றுத்தரக்கூடிய துறையாக இருப்பது உல்லாசப் பயணத்துறை மட்டும்தான். உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் – 19 பெரும் தொற்றுக் காரணமாகவும், பின்னர் பொருளாதார நெருக்கடி – நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் போன்றவற்றால் உல்லாசப் பயணத்துறை பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. ஆனால், அண்மைக்காலத்தில் உல்லாசப் பயணத்துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி பெருமளவுக்கு நம்பிக்கையளிப்பதாக இருக்கின்றது. இருந்தபோதிலும் தமிழ்ப் பகுதிகளில் இதனை மேலும் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் அதிகளவுக்குக் கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

ஜூலை மாதத்தின் முதல் 13 நாள்களில் மட்டும் 55,566 உல்லாசப் பயணிகள் நாட்டுக்குள் வந்திருக்கின்றார்கள் என்ற செய்தி நம்பிக்கையளிப்பதாக இருக்கின்றது. இதன்மூலமாக இந்த வருடத்தில் இலங்கைக்கு வந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை 6,80,440 ஆக அதிகரித்திருக்கின்றது. இம்மாதம் வந்த உல்லாசப் பயணிகளில் அதிகமானவர்கள் இந்தியாவிலிருந்தே வந்திருக்கின்றார்கள். இது 18 வீதமாகும். அதற்கு அடுத்ததாக பிரித்தானியாவிலிருந்து 10 வீதமானவர்களும், சீனாவிலிருந்து ஆறு வீதமானவர்களும் வந்திருக்கின்றார்கள். அதற்கு அடுத்ததாக ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து வந்த உல்லாசப் பயணிகள் உள்ளார்கள். ஆக, இலங்கைக்கு அதிகளவுக்கு உல்லாசப் பயணிகளைக் கொண்டுவரும் முதல் ஐந்து நாடுகளாக இவை உள்ளன.

சீனாவிலிருந்து அண்மைக்காலத்தில் அதிகளவுக்கு உல்லாசப் பயணிகள் வருகைதருவதற்குப் பிரதான காரணமாகச் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சீனாவின் தேசிய விமானச் சேவையான "எயர் சைனா" தனது சேவையை மீள ஆரம்பித்திருப்பது ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர்தான் "எயர் சைனா" விமான சேவை இடைநிறுத்தப்பட்டது. அதற்கு முன்னர் சீனாவிலிருந்து அதிகளவு உல்லாசப் பயணிகள் இலங்கை வரும் நிலை இருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது. ஆக, விமான சேவைகளை அதிகளவுக்குத் திறந்துவிடுவதும், ஊக்குவிப்புக்களும் அதிகளவுக்கு உல்லாசப்பயணிகளைக் கொண்டுவருவதற்கு உதவும்.

தற்போது யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான விமான சேவை தினசரி நடைபெறுகின்றது. தமிழகத்திலிருந்து வரக்கூடிய உல்லாசப்பயணிகள் வடக்கில் உள்ள கோவில்கள், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களை இலக்கு வைத்துத்தான் வருகின்றார்கள். இப்போது கோவில் திருவிழாக்களும் ஆரம்பமாகின்றன. அத்துடன் இது கோடை விடுமுறைக் காலம். தமிழகப் பயணிகளைக் கவர்வதற்குப் பொருத்தமான காலமாகவும் இது இருப்பதால், அதனை இலக்கு வைத்த செயற்பாடுகளை அரசாங்கமும், துறை சார்ந்தவர்களும் பயண முகவர்களும் முன்னெடுப்பது அவசியம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### நல்லூர்த் திருவிழாவும் பொருளாதாரமும்

கடந்த வாரம் அட்டைப்படக் கட்டுரையாக வெளியிட்டிருந்த "நல்லூர்ப் பெருந்திருவிழாவும் இலங்கைப் பொருளாதாரமும்" என்ற கட்டுரை மிகவும் சிறப்பாகவும், புதிய பல தகவல்களைத் தருவதாகவும் அமைந்திருந்தது. யாரும் இதனை ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் பார்க்காத நிலையில், சுவாமிநாதன் சர்மா எழுதியிருந்த கட்டுரை புதிய சிந்தனைகள் பலவற்றைத் தூண்டிவிடுவதாகவும் அமைந்திருந்தது. சர்வதேச ரீதியாக இடம்பெறும் விளையாட்டுப்போட்டிகள் சிலவற்றுடன் நல்லூர் திருவிழாவையும் அவர் ஒப்பீடு செய்து - அதன் மூலமாகக் கிடைக்கும் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தியிருந்தது சிறப்பு. புதிய தகவல்களைத் தருவதுடன், புதிய சிந்தனைகளை உருவாக்குவதிலும் பொருண்மியத்தின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கின்றது.

**பவானி தனஞ்சயன். - கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

●●●

### எம்மிடமிருந்த மீள்சுழற்சி முறைகள்

வடகோவை வரதராஜன் கடந்த வாரத் தமிழர் பொருண்மியம் வார இதழில் எழுதியிருந்த "எம்மிடமிருந்த மீள்சுழற்சி முறைகள் காணாமல் போனது எப்படி?" என்ற கட்டுரையைப் படித்தேன். வடபகுதியில் பல தொழில் நிறுவனங்கள் இயங்கிவந்திருப்பதை அவர் அந்தக் கட்டுரையில் வெளிப்படுத்தியிருந்தார். அவரது தகவல்கள் ஆச்சரியமானதாக இருந்தன. அதேவேளையில் பிளாஸ்டிக் பாவனை போன்றவை தொடர்பாக அவர் தெரிவித்திருக்கும் தகவல்களும் கவனிக்கப்படவேண்டியவை. கடந்த வாரம் வெளிவந்த ஆடைத் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்த கட்டுரையும் பயனுள்ளதாக இருந்தது. இது போன்ற அரிய தகவல்களை உங்களுடைய வார இதழில் மட்டும்தான் படிக்க முடிகின்றது.

**மயில்வாகனம் சிறிதரன். - திருகோணமலை.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - -----------------------------------------
**செலுத்திய தொகை** - -------------------------------------
**செலுத்திய திகதி** - --------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,66,950 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,82,050 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** போக்குவரத்துச் சேவையை தனியார் மயமாக்குவதன் மூலமாகத்தான் சிறப்பான சேவையை வழங்க முடியுமா?

**பதில் -** நிச்சயமாக இல்லை. இலங்கையைப் பொறுத்தவரையில் தனியார் துறையைவிட அரசாங்க துறையில் உள்ள பஸ்கள்தான் சிறப்பான சேவையை வழங்குகின்றன. ஆனால், பிரச்சினை என்னவென்றால், சிறப்பான நிர்வாகம் அங்கில்லாதிருப்பது போதிய இலாபம் கிடைக்காமைக்குக் காரணமாக இருக்கலாம். நிர்வாகத்தை வினைத்திறன் உள்ளதாக சிறப்பான முறையில் மாற்றியமைப்பதன் மூலமாக அரச துறையில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

2025 ஆம் ஆண்டளவில் இலங்கை போக்குவரத்துச் சபை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்படாத நிலையில், அது தனியார் மயப்படுத்தப்பட வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்தார். அமைச்சரின் இந்தக் கருத்து இ.போ.ச. நட்டத்தில் இயங்குகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

அத்துடன், ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக மேல் மாகாணத்தில் மாத்திரம் நாளொன்றுக்கு 400 பஸ்களை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக போக்குவரத்துச் சபைக்கு பெருமளவு நிதி இழப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

836 புதிய சாரதிகள் மற்றும் 290 நடத்துனர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளபோதும், இன்றுவரை 532 சாரதிகள் மற்றும் 201 நடத்துனர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். போதியளவுக்குப் பணியாட்கள் இல்லாதது இ.போ.ச. எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை என்பது தெரிகின்றது. போதிய வேதனத்தைக் கொடுப்பது அல்லது, நடத்துநர் இல்லாமல் பஸ்களை இயக்குவதற்கான திட்டத்தை வகுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இந்த ஆண்டில், கியூ.ஆர். குறியீட்டு முறையைப் பயன்படுத்திப் பஸ்களுக்கு கட்டணம் செலுத்துவதற்கான நவீன தொழில்நுட்ப முறைமை உருவாக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார். இது பணியாட்கள் இல்லை என்ற குறைபாட்டை போக்க உதவலாம்.

இலங்கை போக்குவரத்து சபையினை இலாபகரமான நிலைக்குக் கொண்டுசெல்லும் பட்சத்தில் ஊழியர்களுக்குக் காப்புறுதி வழங்குவதுடன், நிறுவனத்தின் இலாபத்தில் ஒரு பகுதிஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்திருந்தார்.

மேற்கு நாடுகளில் காணப்படுவது போன்ற ஒரு நிலையை இங்கும் உருவாக்குவது ஆட்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள உதவலாம். அனைத்துக்கும் தனியார் மயமாக்கல் தீர்வல்ல.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 280/= |
| உருளைக்கிழங்கு | - 220/= |
| பச்சைமிளகாய் | - 450/= |
| தக்காளி | - 420/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 250/= |
| கரட் | - 400/= |
| பூசணி | - 120/= |
| புடோல் | - 160/= |
| வாழைக்காய் | - 180/= |
| சின்ன வெங்காயம் | - 480/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாவற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 300/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 350/= |
| போஞ்சி | - 500/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 213/= |
| கனடா டொலர் - | 238/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 353/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர்டொலர் - | 237/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 409/= |
| சுவிஸ் பிராங் - | 364/= |
| அமெரிக்க டொலர் - | 315/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 225/= |
| கனடா டொலர் - | 251/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 370/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர் டொலர் | 249= |
| ஸ்ரோலிங் பவுண் - | 429/= |
| சுவிஸ் பிராங் - | 386/= |
| அமெரிக்க டொலர் - | 328/= |

# பொருத்தமான பெயர்



வேதநாயகம் தபேந்திரன்



**அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன் போராடும் இக் காலத்தில் எனது பிள்ளைகளை வளர்க்கத் தென்னம்பிள்ளைகள் கைகொடுக்கின்றன. எமது முன்னோர் உண்மையில் கெட்டிக்காரர்கள் தான். பிள்ளைகள் வளர்ந்து பெரியோராகியதும் பெற்றோரைப் பார்ப்பது போலத் தென்னைகளும் பார்க்குமெனத் தெரிந்தே தென்னம்பிள்ளைகள் எனப் பெயர் வைத்துள்ளார்கள்.**

தென்னம்பிள்ளை. தென்னை மரத்துக்கு இப்படியொரு மிகப் பொருத்தமான ஒரு பெயரை வைத்த எமது முன்னோர்கள் உண்மையிலேயே மெய்ஞானிகள் தான்.

எனக்கு 2020 ஒகஸ்ட் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான 05 மாத காலத்தில் அருமையானதொரு ஒய்வு கிடைத்தது.

செப்ரெம்பர் மாதத்தில் பருவமழை தனது உருவ நடையைத் தொடங்கும். ஆகவே ஒகஸ்ட் முதலே எனது வேலையைத் திட்டமிட்டேன்.

எனது குடியிருப்புக் காணியிலும் ,வேறு ஒரு காணியிலும் வளர்ந்து காய்க்கும் தென்னை மரங்களில் பசளைக் குறைவு காரணமாக ஒரு சோர்வு தெரிந்தது.

இயற்கைப் பசளையிடல் வேண்டும். இரண்டு காணிகளிலும் ஏறத்தாழத் தலா 2000 வீதம் 4000 தென்னை மட்டைகள் இருந்தன. கொரோனாப் பெருந்தொற்று நோய் காரணமாகப் பொச்சுமட்டையைத் தூசாக்கி ஏற்றுமதி செய்யும் தொழில் பெரியதொரு வீழ்ச்சியில் இருந்தது.

எமது வளவுகளிலும் இலைகுழை சருகுகள் தாராளமாக இருந்தன.

எனது நல்ல காலத்திற்கு இடையிடையே நிலம் குளிரச் சின்னதொரு மாரி மழை பொழிந்தது.

தென்னை மரத்தின் அடியிலிருந்து எட்டடி தூரத்தில் கிடங்கு வெட்டத் தொடங்கினேன். நாலடி அகலம். எட்டடி நீளம். இரண்டடி ஆழம். வெட்டிய கிடங்கில் தென்னை மட்டைகளை பொச்சு மேல் பக்கம் பார்க்கக் கூடியதாக மட்டை கீழ்ப் பக்கமாகவும் அடுக்கினேன். நில மட்டம் வந்ததும் மேலும் ஓர் அடி உயரத்திற்குப் பொச்சுகளை அடுக்கினேன்.

அடுக்கிய பின்பாக ஏற்கனவே வெட்டிய கிடங்கின் மண்ணைப் பொச்சு மட்டைகளின் (தென்னம்மட்டை) மேல் மண்வெட்டியால் இட்டேன்.

தென்னை மரத்தின் அடியிலிருந்து எட்டடி தூரத்திற்குள் கிடங்கு வெட்டக் கூடாது. அவ்வாறு வெட்டினால் தென்னம் பாளைகளில் உண்டாகும் குரும்பைகள் மூன்று மாதத்திற்குக் கொட்டும். காய்கள் வராது. இது எமது மூத்தோர் சொல்லித் தந்த அனுபவம்.

இரு தென்னை மரங்களுக்கு இடையேயான தூரம் 25 முதல் 27 அடி வரையில் இருக்கும் வகையில் நடுகை செய்ய வேண்டும். அப்போது தான் மரங்கள் நன்றாக வளர்ந்து நிறையக் காய்களைத் தரும். கிட்டடியாக நட்டால் சோடை பற்றித் தென்னைகள் காய்க்காது.

தென்னை மரங்களுக்குக் கிடங்கு வெட்டிப் பொச்சு மட்டை தாட்ட போது இலைகுழை சருகுகளையும் இயலுமான வரையில் கலந்தேன்.

இரண்டு மாரி கழியத் தான் பொச்சு மட்டைப் பசளையின் சத்து நிலத்தில் சேர்ந்து தென்னையின் காய்திறன் கூடுதலாக இருக்கும். அது வரையில் தென்னை மட்டைகள் ஒவ்வொன்றும் தனது நிறையைப் போல ஆறு மடங்கு தண்ணீரை உறிஞ்சி வைத்திருக்கும்.

மழை பெய்யும் தருணங்களில் இவ்வாறு தண்ணீரை உறிஞ்சி வைத்திருப்பதன் மூலமாகத் தென்னைகள் வருடம் முழுவதும் குளிர்மையாக நின்று நிறையக் காய்களைத் தரும்.

சொன்னது போல 2020, 2021 மாரிகள் கழியத் தென்னை மரங்களில் வித்தியாசம் தெரிந்தது. வட்டு நிறையக் காய்கள் தெரிந்தன. தேங்காய்கள் பருமனில் பெரிதாகவும் அதன் அடைப்பம் பெரியதாகவும் இருந்தது.

அத்துடன் நிறையத் தேங்காய்ப் பாலும் கிடைத்தது. பாலின் சுவையும் தரமும் உயர்வாக இருந்தது. கொப்பறாவாக்கித் தேங்காய் எண்ணெய் ஊற்றினால் நிறைய எண்ணெய் கிடைத்தது. எண்ணெய்யும் உயர்தரமாக இருந்தது.

இரண்டு மாரிகள் கழிந்த போது ஏற்கனவே தாட்ட பொச்சு மட்டைகள் உக்கிக் கிடங்குகள் தாழிறங்கி இருந்தன.

அதனால் 2022 மாரி காலம் வந்த போது திரும்பவும் அக் கிடங்கின் மேலாகப் பொச்சு மேலே பார்த்து இருக்கக் கூடியதாகவும் நிலமட்டத்தை விட ஒரு அடி உயரமாக வரக் கூடியதாகவும் பொச்சு மட்டைகளைத் தாட்டேன்.

தென்னை மரங்கள் தொடர்ந்தும் குளிர்மையாக உள்ளன. நிறையக் காய்களைத் தருகின்றன. கடும் கோடைக் காலத்தில் தென்னை மரங்களுக்குத் தண்ணீர் இறைக்கும் போது இந்தப் பொச்சு மட்டைக் கிடங்குகளின் மேல் நன்றாக நனைந்து ஊறும் வண்ணம் விடுகிறேன்.

தென்னைகள் உயர்திறனில் விளைச்சலைத் தருகின்றன. வரப்போகும் 2023 ஆம் ஆண்டு மாரியிலும் தாழ்ப்பதற்கு ஒரு தொகுதி மட்டைகளைச் சேகரித்து வைத்துள்ளேன்.

அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன் போராடும் இக் காலத்தில் எனது பிள்ளைகளை வளர்க்கத் தென்னம்பிள்ளைகள் கைகொடுக்கின்றன.

எமது முன்னோர் உண்மையில் கெட்டிக்காரர்கள் தான். பிள்ளைகள் வளர்ந்து பெரியோராகியதும் பெற்றோரைப் பார்ப்பது போலத் தென்னைகளும் பார்க்குமெனத் தெரிந்தே தென்னம்பிள்ளைகள் எனப் பெயர் வைத்துள்ளார்கள்.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

--------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

--------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

--------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

--------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

--------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

--------------------------------------

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

--------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

--------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

--------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

--------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

--------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

--------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

--------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

---------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---------------------------------------




### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

---------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---------------------------------------



### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113




# தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY பொருண்மியம் விருதுகள் - 2023



எமது நாட்டின் பொருளாதாரப் பங்காளர்களாய் இருக்கும் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் கண்டுபிடிப்பாளர்களைக் கௌரவித்து பெருமைப்படுத்தும் நோக்குடன் "கிரீன் மீடியா" நிறுவனத்தின் தமிழர் பொருண்மியம் வார இதழ் சிறப்பு விருதுகளை வழங்கவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழா பொருண்மியம் நடத்தும் "கோடைக் கொண்டாட்டம்" நிகழ்வில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் விருதுகளை பெற்றுக்கொள்ள தகுந்தவர்கள் என்று நீங்கள் கருதும் தொழில் முயற்சியாளர்களை, அவர்கள் குறித்த சிறிய குறிப்போடு நீங்களே எங்களுக்கு சிபார்சு செய்யலாம்.

இதற்காக நீங்கள் செய்யவேண்டியது இதுதான். நீங்கள் சிபார்சுசெய்யும் தொழில் முயற்சியாளர் அல்லது கண்டுபிடிப்பாளரின்,

- பெயர்
- முகவரி
- மேற்கொள்ளும் தொழில் முயற்சி
- தொலைபேசி இலக்கம்
- விருதுக்காக நீங்கள் சிபார்சு செய்பவர் பற்றியதான சிறிய குறிப்பு என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அத்துடன் உங்கள் பெயர். தொடர்பிலக்கம் என்பவற்றையும் தெரியப்படுத்துங்கள்.

## பொருண்மியம் சிறப்பு விருதுகள் பின்வரும் பிரிவுகளில் வழங்கப்படும்

1. சுய தொழில் முனைவோர் விருது
2. இளம் தொழில் முனைவோர் விருது
3. சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது

உணவு உற்பத்தி, பாரம்பரிய கைத்தொழில்கள் (நெசவு, நூல் துணிகள், வாழை நார் உற்பத்தி, பனம்பொருள் உற்பத்தி போன்றன)
குடிசைக்கைத்தொழில்கள் (கைவினைப்பொருட்கள், ஆடை அணிகலன், பாதணிகள், சவர்க்காரம், போன்றன)

4. சிறந்த கண்டுபிடிப்பாளர் விருது

கண்டுபிடித்த உபகரணம் தற்போது பொதுப் பாவனையில் இருக்க வேண்டும், அத்துடன் எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும்.

5. பெருந்தொழில் முயற்சியாளர் விருது

பிரதேச சபை மற்றும் மாவட்ட/அல்லது கம்பெனி பதிவுகளை கொண்டிருக்க வேண்டும்.

**சமூக அக்கறை மற்றும் சமூகத் தொண்டுகள் மேலதிக தகைமையாக கருதப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30.07.2023**

கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் தகவல்களை அனுப்ப முடியும் - Tamilseconomy@gmail.com

மேலதிக தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்.
**0777276949**



# கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணையம்

**வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஒரு முக்கிய முன்னேற்றமாக கொழும்புத் துறைமுக நகரத்தில் முயற்சிகளைத் தொடங்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கான ஊக்கத்தொகைகள் மற்றும் வரி விலக்குகள் ஜூலை 7 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி (2339/31 மற்றும் 2339/32) மூலம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன.**

கொழும்புத் துறைமுக நகரம் (போர்ட் சிட்டி கொழும்பு) 269 ஹெக்டேர் கடல் பரப்பை நிரப்பிப் புதிதாக உருவாக்கபட்டுச் சேவைகளின் ஏற்றுமதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் சிறப்புப் பொருளாதார வலயத்தையும் உள்ளடக்கியது. இது இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலப் பரப்பை மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்ட தொலை நோக்குத் திட்டமாகும். இது ஒரு பல்கலாசார வாழ்க்கை முறை, உலகத்தரம்வாய்ந்த உட்கட்டமைப்பு மற்றும் நிலையான வாழ்க்கை ஆகியவற்றை வழங்குவதாக உறுதியளிக்கிறது.

முதல் 5 வருடத் திட்டமாக அந்நிய நேரடி முதலீட்டில் $5.6 பில்லியன் (Billion) பெற்றுக்கொள்வதனையும், இலங்கையின் பொருளாதார மீட்சியை விரைவாகக் கண்காணிக்கவும், போர்ட் சிட்டி மற்றும் இலங்கை ஆகிய இரண்டையும் சேவை ஏற்றுமதித் துறையில் முன்னணித் தளமாக நிலைநிறுத்துவதனையும் நோக்கமாக கொண்டுள்ளது. ஒட்டுமொத்தமாக கொழும்புத் துறைமுக நகரம் 140,000க்கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதுடன், வருடாந்தம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் $13.8 பில்லியன் (Billion) பங்களிப்பை வழங்குகிறது. மதிப்பிடப்பட்ட நிதி வருவாய் $ 1.7 பில்லியன் (Billion) கட்டுமானக் கட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் திட்டத்தின் செயற்பாட்டுக் கட்டத்தில் ஆண்டுக்கு சுமார் $700 மில்லியன் (Million)தொடர்ச்சியான வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

சமீபத்தில் மேம்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் (DCR) ஜூன் 2 இன் அதிவிசேட வர்த்தமானி எண் 2334/47 மூலம் வெளியிடப்பட்டது. இது கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு மதிப்பீடு மற்றும் திட்டமிடல் அனுமதி, அபிவிருத்தி அனுமதிகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெற உதவுகின்றது. இத்திட்டத்திற்கு இணங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட முதன்மைத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள 6.3 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவில் கட்டக்கூடிய பரப்பளவில் மெரினா வசதி, சொகுசு வில்லாக்கள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த ரிசார்ட், மாநாட்டு மையம், சர்வதேச பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த சூழலை வழங்கும் மருத்துவமனை மற்றும் நிதி மையம் போன்றவை அடங்குகின்றன.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கொழும்புத் துறைமுக நகரத்தில் முயற்சிகளைத் தொடங்க விரும்பும்



முதலீட்டாளர்களுக்கான ஊக்கத்தொகைகள் மற்றும் வரி விலக்குகள் ஜுலை 7 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானி (2339/31 மற்றும் 2339/32) மூலம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளன. கொழும்புத் துறைமுக நகரத்திற்கான 2023இன் முதன்மை நோக்கம் அபிவிருத்தியாளர்கள், குடியிருப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றியுள்ள சமூகம் உட்பட அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிப்பதாகும். இந்த ஒழுங்குமுறைகள் கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் உள்ள அனைத்து நிலப்பரப்புகளிலும் வளர்ச்சியின் தன்மை, கட்டிட உயரம் மற்றும் ஒட்டுமொத்தக் கட்டுமான கட்டமைப்பிற்கான வழிகாட்டுதல்களை நிறுவுகின்றன. அவை ஒரு முக்கிய திட்டமிடல் கருவியாகச் செயற்படுவதுடன் ஒத்திசைவான மற்றும் ஒழுங்கான வளர்ச்சியை உறுதி செய்கின்றன.

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்திற்கு இணங்க முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கொழும்புத்துறைமுக நகரப்பொருளாதார ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து 2023 ஆம் ஆண்டு ஜுலை 07 ஆம் திகதி ஒழுங்குமுறைகளை வெளியிட்டார். அதில் போர்ட் சிட்டிக்குள் அமைக்கப்படும் நிறுவனங்களுக்குச் சலுகைகள் மற்றும் வரி விலக்குகள் கிடைக்கும். நான் இந்தக் கட்டுரையில் வரிச் சலுகைகள் தொடர்பான வர்த்தமானி எண் 2339/32 இன் முக்கிய அம்சங்களைத் தொகுத்துள்ளேன்.

A. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முதன்மை வணிகத்திற்கு -

FOR A PRIMARY BUSINESS OF STRATEGIC IMPORTANCE

அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதியில் மற்றும் அதிலிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டு ஒரு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அபிவிருத்தி செய்வதற்கு முதலீடு செய்து பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு 'முதன்மை' வணிகமாக நியமிக்கப்பட்டுக் கொழும்புத் துறைமுக நகரத்தில் சலுகைகள் மற்றும் வரி விலக்குகளை அனுபவிப்பதற்கு தகைமை உள்ளவராக அடையாளம் காணப்படுவார்.

1. வணிகங்கள் ஒரு நிலப்பரப்பிற்குக் குறைந்தபட்சம் $100 மில்லியன் முதலீடு செய்தல் வேண்டும், அல்லது துணைப் பிரிவு செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதி முதலீடு செய்தல் வேண்டும்.

அல்லது

2. வணிகங்கள் மெரினாவுக்காகக் குறைந்தபட்சம் $25 மில்லியன் முதலீடு



செய்தல் வேண்டும் (கொழும்புத் துறைமுக நகரத்தில் மெரினா வர்த்தக நிலப் பயன்பாடு மற்றும் மெரினா வசதி நிலப் பயன்பாட்டிற்காக நியமிக்கப்பட்ட நிலங்கள்) அல்லது சமூக உட்கட்டமைப்பு (கல்வி, கலாச்சார மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட நில அடுக்குகள் மற்றும் கொழும்புத் துறைமுக நகரத்தில் அமைந்துள்ள மாநாட்டு மைய நிலப் பயன்பாடு).

மூலோபாய முக்கியத்துவத்தின் முதன்மை வணிகமாக வடிவமைக்கப்பட்ட வணிகமானது பின்வரும் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலக்குகள் அல்லது ஊக்கத்தொகைகளுக்கு உரிமையுடையது:

1. கீழே உள்ள இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து 25 ஆண்டுகள் விலக்குகள் மற்றும் 25 ஆண்டுகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 10 ஆண்டு மதிப்பீட்டின் காலத்திற்குப் பொருந்தும் நேரடி வருமான வரி விகிதங்களில் 50% குறைப்பு.

2. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைக்கு இணங்க கணக்கிடப்பட்ட மூலதனக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக மதிப்பிடப்பட்ட வருடத்தின் போது கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் பயன்படுத்தப்படும் அருவ சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய தேய்மான சொத்துக்களுக்கு 300% மூலதனக் கொடுப்பனவு பெறமுடியும்.

மேம்படுத்தப்பட்ட மூலதன கொடுப்பனவுகள் கோரப்பட்டு அது நிவாரணமடையாத இழப்பை விளைவித்தால் அத்தகைய நிவாரணமில்லாத இழப்பை 40 ஆண்டுகளில் வருமானத்தில் கழிக்க முடியும். மேலும், அத்தகைய முதன்மை வணிகம் 25 ஆண்டுகளுக்கு உள்நாட்டு இறைவரிச் சட்டம் அல்லாத பிற இணைப்பு 1 இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

கொழும்புத் துறைமுக நகரத்தில் உள்ள வணிகங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விலக்கு அல்லது ஊக்கத் திட்டங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்று வர்த்தமானி குறிப்பிடுகிறது. தேர்வு செய்யப்பட்டுப் போர்ட் சிட்டி கமிஷனுக்குத் தெரிவிக்கப்பட்டதும் பின்னர் அதனை மாற்ற முடியாது.

B. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகத்திற்காக

SECONDARY BUSINESS OF STRATEGIC IMPORTANCE

கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் குறிப்பிட்ட நியமிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த 'இரண்டாம் நிலை' வணிகங்களாகக் கருதப்படுவார்கள்.

நியமிக்கப்பட்ட வணிக நடவடிக்கைகளில் பின்வருவன அடங்கும்:

1. சர்வதேச வர்த்தகத்தில் உலகளாவிய மற்றும் பிராந்தியப் பொருளாதார நடவடிக்கை

2. கப்பல் தளபாடச் செயற்பாடுகள்

3. வெளிவணிக வங்கி மற்றும் நிதி செயற்பாடுகள்

4. தகவல் தொழில்நுட்பம்

5. வணிகச் செயன்முறை அவுட்சோர்சிங்

6. கூட்டிணைக்கப்பட்ட பல்தேசிய வணிக நிறுவனத் தலைமையக செயற்பாடுகள்

7. பிராந்திய விநியோகச் செயற்பாடுகள்

8. சுற்றுலா மற்றும் துணைச் சேவைகள்

9. கண்டுபிடிப்பு - Innovation

**(23ஆம் பக்கம் பார்க்க)**

# தேனீக்களின் வாழ்விடத்தைப் பாதுகாத்து இயற்கையாக உற்பத்தி செய்ய வேண்டும்




**‘எங்கிருந்தோ இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுகளின் தரத்தைப் பற்றி அங்கலாய்த்து கொள்கின்ற நாங்கள் எங்களது சொந்த நிலங்களில் நமக்கான உணவை நாம் உற்பத்தி செய்வது கொள்வதைப் பற்றி ஏன் யோசிக்கவில்லை? குறைந்த எண்ணிக்கையுடைய சிலர் இது பற்றி அக்கறை கொண்டாலும் பெரும்பான்மையானவர்கள் வாங்கி யுண்ணும் நுகர்வுக் கலாச்சாரத் திலேயே தங்கி விடுகிறோம் என்பது தான் உண்மை’**

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

சமூகத்தின் மீதான அக்கறையும் இயற்கையின் மீது பெரும் காதலும் கொண்டவர் நிரோஜன். இவர் பெரதெனியா பல்கலைக்கழகத்தில் குடிமுறைப் பொறியியல் பட்டப்படிப்பை முடித்துவிட்டு இயற்கை பற்றிய பெரும் தேடலோடும் நமது தொன்மைகளையும் பாரம்பரியங்களையும் காக்கும் மிகச் சிறந்த செயற்பாடுகளோடும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறார். நாளின் ஒரு பகுதியில் இரண்டு மணித்தியாலங்களைப் புத்தக வாசிப்பிற்காக ஒதுக்கும் காரை நிரோஜனை தமிழர் பொருண்மியம் நேர்கண்டது.

### இயற்கையுடன் இணைந்து வாழ்தல்

இயற்கை எமக்கு அளித்துள்ள கொடைகளில் அலாதியானதும் அத்தியாவசியமானதுமான உணவு உற்பத்தி பற்றி நாங்கள் அதிகமாகச் சிந்திக்கத் தவறிவிடுகிறோம். பசிக்கின்ற போது மட்டும் உணவு பற்றி நினைக்கின்ற நாங்கள் அதன் மீதான உழைப்பைப் பற்றி அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. ஆரம்ப காலத்தில் உணவே மருந்து என்ற வழக்கம் இருந்தது. இன்று உணவிற்குப் பதிலாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமைக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றோம் என்றால் இந்த விளைவுகளுக்கெல்லாம் எங்களது உணவுப் பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

எங்கிருந்தோ இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுகளின் தரத்தைப் பற்றி அங்கலாய்த்துக் கொள்கின்ற நாங்கள் எங்களது சொந்த நிலங்களில் நமக்கான உணவை நாம் உற்பத்தி செய்வது கொள்வதைப் பற்றி ஏன் யோசிக்கவில்லை? குறைந்த எண்ணிக்கையுடைய சிலர் இது பற்றி அக்கறை கொண்டாலும் பெரும்பான்மையானவர்கள் வாங்கியுண்ணும் நுகர்வுக் கலாச்சாரத்திலேயே தங்கி விடுகிறோம் என்பது தான் உண்மை.



நிரோஜன்

வளர்ச்சி அடைந்த நாடுகளைப் பொறுத்த வரையில் ஒப்பீட்டளவில் கூட நமது உணவுக் கலாச்சாரத்தில் நாங்கள் நெருங்கி வரவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். தேனும் திணை மாவும் கொட்டிக்கிடக்கின்ற எங்கள் பூமியில் தான் வெளிநாட்டு உணவுகளுக்கு அடிமையான ஒரு கூட்ட மக்களும் உருவாகி வருகின்றனர் என்பது ஒரு வேதனைக்குரிய விடயம். நிரோஷன் ஒரு பொறியியலாளன் மட்டும் இல்லை. தேனீக்களுக்கு இயற்கை முறையில் வாழ்விடம் அமைத்துக் கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை பிடுங்கிக் கொள்ளாமல், தேனீக்களை அழித்து விடாமல் தேனைப் பெற்றுக் கொள்ளும் தந்திரோபாயங்களைக் கற்றுக் கொடுக்கக்கூடிய, அதனை நடைமுறையில் செயல்படுத்தக் கூடிய ஓர் இயற்கை வல்லுனன்.

காரைநகரின் புழுதி மண்ணிலே இயற்கை முறையில் சிறுதானியங்களை விதைத்துப் பலருக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வருகின்றார். விவசாயத்தில் தொன்று தொட்டு ஈடுபடுபவர்களுக்கு கூட அறிமுகம் இல்லாத சிறுதானிய விதைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நிரோஜனுக்கு இருக்கும் ஆவலின் காரணமாக இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களுக்கும் உணவுப் பாரம்பரியத்தைத் தேடி பயணித்துக் கொண்டிருக்கின்றார். பயணங்கள் அனைத்தும் புதுப்புது மனிதர்களையும் புதிய விடயங்களையும் அறிமுகப்படுத்துகின்றன. இயற்கை அந்தந்த பிரதேசங்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு விளைவித்த பயிர் வகைகளை எந்த கலப்புகளும் இன்றி அந்தந்த நிலங்களில் பயிரிடும்போது நமது தொன்மையான பயிர்கள் அழிந்து போகாமல் காப்பாற்ற முடியும் என்று ஆணித்தரமாக நம்புகின்றார்.



### சவால்கள்

புதிதாக எந்த ஒரு விடயத்தை ஆரம்பித்தாலும் மக்களிடத்தில் அதற்கான ஒரு வரவேற்பும் எதிர்பார்ப்பும் நிச்சயமாக இருக்கும். அதே சமயம் அதிகம் மாற்றுக் கருத்துக்களும் எழும். ஆனாலும் நாங்கள் சரியான கருத்தில் நிலையாக நிற்பதற்கு பழகி இருக்க வேண்டும்.

சவால்கள் தானே எப்போதும் சாதிக்க வேண்டும் என்கின்ற தைரியத்தையும் தருகின்றது. இந்த நாகரீக உலகத்தில் இன்னும் இயற்கையை நம்பிக் கொண்டிருக்கின்றோம் என்று ஏளனமாக எள்ளி நகையாடுகின்ற சமூகத்தில் அவர்களுக்கும் அவர்களின் சந்ததிக்குமான அடுத்த கட்ட உணவுக்காக நாங்கள் ஓடிக் கொண்டிருக்கிறோம் என்பதும், நஞ்சற்ற உணவை கொடுப்பது என்பது நாகரீக வளர்ச்சிக்கு முரணாகாது என்பது பற்றியும் விளக்கமளிக்க வேண்டி இருக்கிறது. நமது உற்பத்தி பொருட்கள் எப்போதும் பாதுகாப்புச் சேர்மானங்கள் எதுவும் கலக்கப்படாத இயற்கை மாறாத் தன்மையுடன் இருக்கின்றது. நாங்கள் இப்படித் தரமான பொருட்களை உற்பத்தி செய்யும்போது அதற்கான கேள்விகள் தாராளமாகவே இருக்கின்றன.

ஆனால் இங்கே வாடிக்கையாளர்களுக்குப் போதுமான அளவு பொருட்களை கொடுப்பதற்கான உற்பத்தியாளர்கள் மிகவும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றனர். பாரம்பரிய உற்பத்திப் பொருட்களாலும் இயற்கை விவசாயத்தினாலும் பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

ஆரம்பங்களில் இது ஒரு சவாலான விடயமாக இருந்தாலும் காலப்போக்கில் நமது பொருளாதாரத்தை உயர்த்தும் தொழிற்றுறையாக இதனை மாற்றலாம் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. என்றாலும் இயற்கை விளைவிக்கும் எல்லாவற்றையும் வியாபாரக் கண்ணோட்டத்தோடு மட்டும் நாங்கள் பார்ப்போம் என்றால் அங்கே தான் கலப்படங்களும் கலப்பு விதைகளும் உணவிலே நஞ்சைக் கலக்கும் கைங்காரியங்களும் நமது கடப்படி வரைக்கும் வந்து விடுகின்றன. அவற்றை வாசலோடு நிறுத்தி நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்து கொள்ள முன்னிற்க வேண்டும்.

ஆரம்பத்தில் தேனீக்களை வளர்க்க வேண்டும் என்று பாரிய முயற்சியில் ஈடுபட்டபோது தான் நிறைய படிப்பினைகளையும் பெற்றுக் கொள்ளக் கிடைத்தது. தற்போது தேனீக்கள் உலகெங்கும் அருகி வரும் உயிரினமாகக் கணிக்கப்படுகின்றது. உண்மையிலேயே தேனீக்களை வளர்ப்பது பற்றிய போதிய அறிவின்மையால் தேனீக்களின் இனப்பெருக்கம் அழிக்கப்படுவதும் ஒரு பெரும் காரணமாக இருக்கின்றது. செயற்கைத் தேன்களைப் பெற்று பணம் ஈட்டும் நோக்கோடு மாத்திரம் செயற்பட்டால் நாளை தேனீக்கள் அற்ற இயந்திர உலகம் ஒன்றை எமது அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டி வரலாம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

தேனீக்களுக்கு அவற்றின் வாழ்விடத்தைப் பாதுகாத்து இயற்கை முறையில் தேனை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை கண்டுபிடிக்க வேண்டிய மிகப்பெரிய தேவைப்பாடு ஒன்று நமக்குள் காணப்படுகின்றது. நமது மூதாதையர் முட்டிகளிலும் மரப்பொந்துகளிலும் தேனீக்கள் வளர்த்தனர். தேனீக்கள் தமது வாழிடங்களை தாமே அமைத்துக் கொள்வதற்கு வழிவகை செய்து கொடுத்தனர். தேன்கூட்டில் இருந்து தேனைத் தேனீக்களுக்கு அழிவு இன்றி எப்படி பெற்றுக்கொள்வது என்று அவர்களுக்கு அழகாகத் தெரிந்திருந்தது. இவற்றையெல்லாம் நாங்கள் தேடிப் பயன்பெறுவோமானால் தேன் என்கின்ற அருமருந்து எமக்கு எப்போதும் பெருமருந்தாக இருப்பதோடு, தேனீக்களின் அழிவையும் கட்டுப்படுத்த முடியும். அதேபோலத்தான் சிறு தானியங்களும். சாமை, திணை, கம்பு, வரகு என்று இன்ன பிற சிறுதானியங்களைத் தமது அன்றாட உணவாகக் கொண்டிருந்தனர் நமது முன்னோர்கள். இன்று பெரும் நகரத் தெருக்களில் உள்ள அங்காடிகளில் மாத்திரம் விற்பனை செய்யப்படுகின்ற விலை உயர்ந்த உணவுப் பண்டங்களாக இவை மாறி இருப்பது எத்தனை வேதனையான விடயம்.

குறைந்த செலவோடு உற்பத்தி செய்யப்படுகின்ற இயற்கை உணவுகளுக்குக்கூட மிகப் பெரும் விலை நிர்ணயத்தை செய்து இயற்கை உணவுகளை ஒரு பகட்டாக காட்டுகின்ற நாகரீகக் கலாச்சாரத்திற்குள் நாங்கள் தள்ளப்பட்டுக் கிடக்கின்றோம். அன்றாடம் அவரவர் தத்தம் சிறு துண்டு நிலப்பரப்புகளில் விளைவித்து உண்ணக்கூடிய உணவு வகைகள் கண்ணாடி பெட்டிக்குள் அடுக்கி வைக்கப்பட்டு காட்சிப் பொருட்களாக இருக்கின்றன. எமது இன்றைய தலைமுறையினர் பலருக்கு இந்தச் சிறுதானியங்களை அறிமுகப்படுத்த வேண்டியது எங்கள் அனைவரதும் கடமையாகும். உலகின் பொருளாதார கட்டமைப்புகளுக்கு ஏற்ப, உலகின் பெரும் பணக்காரர்கள் தற்போது உணவு உற்பத்திகளிலும் முதலீடு செய்வதற்கு விரும்புகின்றனர். உணவுகளுக்கு மதிப்பு கூட்டி விற்பனை செய்வது இப்போது பெரும் வியாபாரமாக மாறிவிட்டிருக்கிறது.

உள்ளூர்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தைப்படுத்தல்களை செய்வதும் உள்ளூர் விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டியதும் நுகர்வோரதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளதும் கடமையுமாகும்.

### சந்தைப்படுத்தல்

தற்போது பல்லுயிர் விவசாயிகள் அங்காடி என்கின்ற விற்பனை நிலையம் மூலம் எமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து வருகின்றோம். எங்களது தரமான உற்பத்திகளுக்கு நிறைந்த வரவேற்பு கிடைக்கின்றது.

மேலதிகமாக உற்பத்திகளைச் செய்யும்போது அதனை ஏற்றுமதி செய்வதற்கும் அல்லது பரந்துபட்டு விற்பனை செய்வதற்குமான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ள முடியும். நாங்கள் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டு மனிதர்களை ஏற்றுமதி செய்கின்ற ஒரு வெற்றுக்கலாச்சாரத்தினுள் வாழப்பழகி இருக்கிறோம். மூளை வளம் பொருந்தியவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்க, வெளிநாடுகளில் அவர்கள் தம் வாழ்வாதாரத்திற்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கும் அதே நேரம் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் தேடுவாரற்று போவதும் நிலங்கள். தரிசாகிக் கொண்டு கிடப்பதும் மிகவும் அவமானப்பட வேண்டிய விடயம்.

சமூகத்தை மாற்ற வேண்டுமென்றால் மாற்றம் எங்கள் ஒவ்வொருவரின் மனங்களிலும் ஏற்பட வேண்டும். எமது மரபுப் பயிர்களை மறைந்து விடாமல் காத்து அடுத்த தலைமுறைக்கு நஞ்சற்ற நல்லுணவை வழங்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடப்பாடு தானே?

எனவே உணவுக் கலாச்சாரத்தில் பாரம்பரியம் பேண வேண்டியதன் கட்டாயத்தையும், பாரம்பரிய உணவுகளால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் சிறந்த விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துவதோடு, இவை பற்றிய தேடல்களை முடுக்கி விட வேண்டும். அவை நமது அடுத்த தலைமுறைக்குப் பாரிய வெளிச்சத்தை கொண்டு வரக்கூடிய வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறேன் என்கிறார் இயற்கை நேசகன் காரை நிரோஜன்.



# பணம் பணம்

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்ற குறள் வள்ளுவர் சொன்னதுதான்.. பொருளை எந்த வழிகளிலும் ஈட்டலாம் என்பதையும் அவர் சொன்னார். அதாவது எந்த வழியிலும் பொருள் ஈட்டலாம். ஆனால் அது பிறரை வருத்தாமல் ஈட்டப்பட வேண்டும். அதையும் மிக அச்சப்படும்படியாகச் சொன்னார். பிறர் அழக் கொண்ட சொத்து ஒருநாள் நம்மை அழவைத்துவிட்டுப் போய்விடும்.

செல்வம் என ஒருவர் கருதுவது இன்னொருவருக்கு செல்வமாக இருப்பதில்லை. செல்வத்தைச் சேர்த்தவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்றும் சொல்ல முடியாது. நாங்கள் யாரைச் செல்வந்தர்களாக கருதுகிறோம். பெரிய வீடு நிலங்கள், வாகனங்கள், ஆடை ஆபரணங்கள் என அதிகம் வைத்திருப்பவர்களை எவராயினும் வசதியாக வாழ்கிறார்கள் எனக் கருதுகிறோம். அவர்களைப் பார்த்து அங்கலாய்க்கவும் செய்கிறோம். எவன் ஒருவன் மகிழ்ச்சியாக வாழ்கிறானோ அவன் மிகுந்த மனநலம் உள்ளவன் அவ்வளவுதான். ‘போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து’ எவ்வளவு பொருள் மிகுந்திருந்தாலும் தானதர்மம் செய்யச் சிலருக்கு முடியாது. அந்த மன நிலை இருக்காது.

இலட்ச ரூபாய்களைக் கையில் வைத்திருக்கும் ஒருவன் தனது பொருளுக்கு பத்து ரூபாய் அதிகமாக கிடைக்கும் என்றால், அந்தப் பொருளை அந்த விலை கிடைக்கும் இடத்துக்குச் சுமந்து செல்வதைப்பற்றியே கவலைப்படாமல் சுமந்து செல்வான். இப்படி கஸ்டப்பட்டுச் சம்பாதிப்பதை அவனால் அனுபவிக்கவும் முடிவதில்லை. நான் முன்னரே கூறியது போல அநேகமாக ஆண்கள் வாழ்கிற வாழ்க்கை ஒரு தியாகமான வாழ்க்கைதான். தன்னால் அனுபவிக்க முடியாத இந்தச் செல்வத்தை அவன் தன்னுடையது என்று மட்டுமே சொல்லிக் கொண்டு உழைப்பான். அதை அவனுடைய பிள்ளைகளும் மனைவியும் உறவினர்களும் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

பென்னம்பெரிய ஒரு மளிகைக்கடை முதலாளி. அவருக்கு இன்னும் சில வியாபாரதளங்கள் இருந்தன. அவற்றை பிள்ளைகளிடமோ உறவினர்களிடமோ கொடுத்திருந்தாலும் அப்பப்ப இவரும் ஒருநடை போய்ப்பார்த்துக் கொள்வார். காலையில் கடைக்கு வந்தால் கல்லாவில் உட்கார்ந்து கொள்வார். அந்த மளிகைக்கடை மண்டியில்தான் அவருடைய நாள் செலவாகும். காலை உணவு மத்தியான உணவு எல்லாம் கடைக்கே கட்டி வரும். அந்த மேசைக்கு அப்பால் உட்கார்ந்து உண்பார். அது பத்தியச் சாப்பாடு. மற்றவர்களைப போல விரும்பியதெல்லாம் உண்ணும் பணக்காரர்கள் மிக மிகக் குறைவு. உள்ள பணக்கார வியாதிகளையெல்லாம் வாங்கி வைத்திருப்பார்கள்.

அவருடைய வீட்டில் அறுசுவை உணவு சமைப்பார்கள். அது அவருக்கு ஆகாது. கொடுக்க மாட்டார்கள். அந்த மனிதர் இப்படி அரையுங்குறையுமாக உண்பார்.

வீட்டில் குளிரூட்டி இருக்கும். அதை மளிகைக்கடையில் வைத்திருக்க முடியாது. கார் இருக்கும் அது காலையில் கடைக்கு வரவும் மாலையில் வீட்டுக்குப் போகவும் தான். மற்றப்படி வீட்டில் உள்ளவர்களின் சகல போக்குவரவுகளுக்கும் அந்தக்கார் ஓடும். கடையைப் பூட்டும் ஒருநாளில் அவர் ஓய்வெடுக்கவே விரும்புவார். அன்றைக்கு அவர் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக அவர் பேசலாம் சிரிக்கலாம் உண்ணவோ பயணிக்கவோ முடிவதில்லை. எனினும் அந்த தியாகி தன் குடும்பத்திற்காக உழைத்துக்கொண்டே ஒருநாள் சாவார்.

பணம் பெரிதுதான் பணமில்லாமல் வாழ முடியாதுதான். ஆனால் அந்தப் பணத்தை என்றென்றும் நானே ஆள வேண்டும் என்பது முக்கியமாகும். பணம் நம்மை ஆளக்கூடாது. பணத்தை அது செல்லும் திசைகளை நாமே தீர்மானிக்கவும் கட்டுப்படுத்தவும் தெரிந்தாலே அது பணமாகும். இல்லையேல் அது எம்மைத் தின்று விடும்.

அண்மைக்காலமாக எமது அயலில் உள்ள பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். அதன் காரணம் பணம்தான். அந்தப் பணம் இங்கிருந்து அவர்கள் செலவிட்ட அந்தப் பணத்திலும் அதிகமாகாது. எண்பது இலட்சங்களைக் கொட்டி கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பிய குடும்பப் பெண் ணொருத்தி தன் கஸ்டமெல்லாம் தீரப் போவதாக கனவு கண்டாள். அவர்களுக்கு ஒரு நெற்காணி இருந்தது. அதில் நீர்ப்பாச னம் இல்லை. ஆனால் நல்ல மண் மாரியில் மட்டும் விளைந்தது. வீட்டில் பெரிதாக வறுமையும் இல்லை. ஓரளவு வசதியாக வாழ்ந்தார்கள். அந்தப் பெண் உழைப்பதற்கு பின்நிற்பதேயில்லை. சொல்வார்களே 'பேய்மாதிரி வேலை செய்கிறார்' என்று. அது அவளுக்குப் பொருந்தும் வேலை இல்லாமல் அவள் ஒருநாளும் இருந்ததில்லை. எந்த வேலையென்றாலும் செய்வாள். அவளுக்குத் தேவை காசு காசு மட்டும்தான்.

யார் யாரிடமோ உதவி பெற்றும், காணியை ஈடு வைத்தும் கணவனை வெளிநாட்டுக்கு அனுப்பினாள். சட்டபூர்வமற்ற பயணம் மூன்று மாதத்தில் அவன் திருப்பி அனுப்பப்பட்டு விட்டான். திட்டமிடலில் நேர்ந்த பிழை. அந்தப் பணத்தில் அவர்களுடைய சொந்த நிலத்தில் ஒரு கிணறு வெட்டித் தோட்டச் செய்கையோ அல்லது கோழி வளர்க்கவோ ஆடு வளர்க்கவோ என்று முயன்றிருந்தால் இன்றைக்கு அவளுடைய நிலை என்ன. மேலும் அந்தச்செயலால் நாட்டின் வளமும் உயர்ந்திருக்கும். அவளுடைய கைப்பொருளும் கைவசம் இருந்திருக்கும். பேராசை என்பதா? அல்லது வெளிநாடு என்பது ஒரு பணங்காய்க்கும் இடம் என்று புரிந்து வைத்திருக்கிறார்களா? என்பது தெரியவில்லை. அந்த மனிதரும் தன் மனைவி



> பணத்தைத் தேடியே ஆகவேண்டும். அதற்காக நாம் அதைத் தேடும் வழிகளும் முக்கியம் என்பதை மறக்கக் கூடாது. நாம் பணம் தேடும் வழிகள் மட்டுமல்ல அந்த வழிகளின் ஊடாக இன்னும் பலரை வாழ வைக்க முடிய வேண்டும். சின்னதாக ஒரு தொழிலை நாங்கள் ஆரம்பித்தாலும் அதில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பிருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

யின் விருப்பத்திற்கு ஆதரவாக நடந்து கொண்டது பெரிய அதிசயம்.

இதே மனநிலையில் வெளிநாடுகளுக்குப் பயணப்படுவோர் அங்கே சென்று சில நாட்களுக்குக் கூட வேலை செய்ய முடியாமல் துயரப்படுவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். இவர்கள் தாம் அனுபவிக்காது மனைவிக்கும் தொலை பேசியில் பார்த்து மகிழும் பிள்ளைகளுக்காகவும் கொட்டும் பனியிலும் அனல் உலைகளிலும் உழைத்து மாய்கிறார்கள். அப்படியும் இங்குள்ள உறவுகளின் ஆசைகளை நிறைவேற்ற முடியாமல் மேலதிகமாகவும் வேலை தேடிச் செய்கிறார்கள். அங்கே பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளது என்பதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். பணம்தானே 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே. இவர்கள் திரவியம் தேடுகிறார்களோ இல்லையோ தேக ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்கிறார்கள் அதிகமானவர்கள் பெருமளவு மாரடைப்பு, சலரோகம் இன்னும் பெயர் தெரியாத நோய்களையும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பணத்தைத் தேடியே ஆகவேண்டும். அதற்காக நாம் அதை தேடும் வழிகளும் முக்கியம் என்பதை மறக்கக் கூடாது. நாம் பணம் தேடும் வழிகள் மட்டுமல்ல அந்த வழிகளின் ஊடாக இன்னும் பலரை வாழ வைக்க முடிய வேண்டும். சின்னதாக ஒரு தொழிலை நாங்கள் ஆரம்பித்தாலும் அதில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பிருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும். பண்டைக்காலங்களில் என்ன தொழில் செய்பவருக்கும் அவரது தொழிலில் முழுக் குடும்பமும் ஈடுபடும் அளவுக்கு வாய்ப்பிருந்தது. அதனாலேயே அவர்கள் பிள்ளைகளைச் செல்வமாகக் கொண்டாடினார்கள்.

பானை சட்டி செய்பவராயினும் மண்ணைக் கொண்டு வர பாடசாலை விடுமுறை நாட்கள் தேர்ந்தெடுக்கப்படும் பிள்ளைகளையும் மாமன் மச்சான் உறவுகளையும் கூட்டிச் செல்வார்கள். அதேபோல மண்ணில் கல் நீக்கும் வேலையில் பெண்களும் ஈடுபடுவார்கள். பானையை ஆண் வனைவான். அதை வெய்யிலில் ஓரளவுக்கு வாட வைத்திருந்து பதமாக நிழலில் உலர்த்தி எடுப்பதில் குடும்பம் முழுதும் ஈடுபடும். பின்னர் அதற்குச் செம்மண் சாற்றி காய வைப்பது பெண்களே. அதன் பின் சூளை இடும் நாளில் முழுக் குடும்பமும் வேலை செய்து பானை சட்டிகளை அடுக்கி மேலாக வைக்கோல் பரவி, அதையும் மண் குழைத்து மூடி, பின் சூளை நெருப்பு மூட்டப்படும்.

இப்படி ஒவ்வொரு வேலையிலும் குடும்பம் முழுமையாகப் பங்குபற்றும். விவசாயமும் அப்படித்தான். இந்த உழைப்பு மண்ணுக்காக மக்களுக்காக இந்தப் பணத் தேட்டம் பெருமைக்குரியது. ஒவ்வொரு மனிதரும் அப்படித்தான் உழைக் கிறார் களா?



ஆனந்தன்
பிரேம்நாத்
லக்சி பண்ணை



# சமவெளியில் கோவா பயிர்ச்செய்கை

இலை வகை காய்கறிப் பயிர்களில் கோவாவை மிகக் குறைந்த நாட்களில் நடவு செய்து, 75 -வது நாளிலேயே அறுவடை செய்யலாம். இப்பயிரை மலைப் பகுதிகளில் மட்டுமல்லாது சமவெளியிலும் நடுகை செய்யலாம் என வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இதில் பல இரகங்கள் உள்ளன.

மலைப்பகுதிகளில்விளையும்இரகத்தை விடுத்து, சமவெளிகளில் பயிரிடக்கூடிய இரகத்தை தெரிவு செய்யவேண்டும்.

உங்கள் மாவட்டத்திலுள்ள விவசாய திணைக்களத்தின் ஊடாக அவர்கள் தெரிவு செய்து தரும் இரகத் திணை தேர்ந்தெடுக்க வேண்டும்.

பொதுவாக இப்பயிர் வளமுள்ள எல்லா மண்ணிலும் பயிரிடலாம்.

வடிகால் வசதி மிகவும் அவசியம்.



வண்டல்மண், செம்மண் நிலங்களிலும் நன்றாக வளரும்.

மண்ணின் கார அமிலத்தன்மை 5.5 சதவீதம் முதல் 6.5 சதவீதம் வரை உள்ள நிலங்கள் ஏற்றவை.

இப்பயிரைப் பயிரிடக் குளிர்ச்சியான பனி மூட்டம் தேவை. பொதுவாக எல்லா மலைப் பகுதிகளிலும் பயிரிடலாம். சமவெளிப்பகுதியில் வெப்பம் குறைந்த காலங்களில் மட்டுமே நடுகை செய்யலாம்.

பொதுவாக சமவெளிப்பகுதியில் முன் பருவப் பயிராக செப்டம்பர் மாதங்களில் நடுகை செய்யலாம்.

சிறந்த விதைகளைத் தேர்ந்தெடுத்து பருவம் பார்த்து நடவேண்டும். முன்பருவ வகைகள் முன் பருவத்திலும், பின்பருவ வகைகளை பின்பருவத்திலும் நடவேண்டும். இரகங்களைப் பருவம் மாற்றிப் பயிரிடக்கூடாது.

ஏக்கருக்கு 275 கிராம் விதை போதுமானது.

முட்டைக்கோஸ் விதை மூலம் உற்பத்தி செய்யப்படும் பயிர், பதிய மேடை (நாற்றுக்கள்) தயாரிக்க நல்ல வடிகால் வசதியுள்ள கட்டிகள் அற்ற மண் தேவை.



நாற்று மேடை அமைக்கும் போதும் மக்கிய தொழு உரம் 150 கிலோ, இட்டு 10 முதல் 15 செ.மீ இடைவெளியில் கோடுகள் கீறி, அவற்றில் 10 முதல் 15 செ.மீ ஆழத்தில் வரிசையாக விதைகளை நட வேண்டும்.

நாற்று மேடையில் உள்ள கன்றுகளை 30 முதல் 40 வது நாளில் நடவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

நாற்றுகளைப் பறிப்பதற்கு 5 நாள் முன்பு நாற்றாங்காலுக்கு நீர் பாய்ச்சுவதை நிறுத்திவிடுவதன் மூலம் நாற்றுக்களைக் கடினப்படுத்தலாம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட நாற்றுக்கள் நடவு செய்யப்படும்போது நன்கு உயிர் பிடித்து வளரும்.

கன்றுகளை நடுகை செய்ய முன்னர் நிலத்தை 3 அல்லது 4 முறை உழுது பண்படுத்தவேண்டும். மலைப்பகுதிகளில் நடுவதாக இருந்தால் 40-க்கு 40 செ.மீ இடைவெளியில் நட வேண்டும்.

சமவெளிப் பகுதிகளில் நடுவதாக இருந்தாள் 45-க்கு 30 செ.மீ. இடைவெளி போதுமானது.

இப்பயிரை நாற்று மேடை அமைத்து பதியம் வைத்துக் கன்றுகளை நடுவதற்குப் பதிலாக நேரடி விதைப்பும் செய்யலாம்.

நன்கு தயார் செய்யப்பட்ட நிலத்தில் 60-க்கு 30 செ.மீ இடைவெளியில் 2



விதைகள் வீதம் விதைக்கவேண்டும்.

செடிகள் சுமார் 8 முதல் 10 செ.மீ. உயரம் வளர்ந்தவுடன் இரண்டு செடிகளில். ஒரு செடியைப் பிடுங்கி எறிந்து விட வேண்டும்.

சமவெளிப் பகுதிகளுக்கும், மலைப் பகுதிகளுக்கும். விவசாயத் திணைக்களத்தால் அளிக்கப்படும் உரப் பரிந்துரைப்படி உரங்களைப் பார்த்து இட வேண்டியது அவசியம்.

இப்பயிருக்கு தொடர்ச்சியாக நீர் வேண்டும். ஆனால் நீர் தேங்கக்கூடாது. நடவு செய்யும் முன்னர் நீர் பாய்ச்சவேண்டும்.

பிறகு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீரும். பின்பு 5 நாள்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

இப்பயிர் தலைகள் உருவாகி முதிர்ச்சியடையும் பருவத்தில் நீர் பாய்ச்சுவதைத் தற்காலிகமாக நிறுத்திவிடவேண்டும்.

> *"பொதுவாக சமவெளிப் பகுதியில் முன் பருவப் பயிராக செப்டம்பர் மாதங்களில் கோவாவை நடுகை செய்யலாம். சிறந்த விதைகளைத் தேர்ந்தெடுத்து பருவம் பார்த்து நடவேண்டும். முன்பருவ வகைகளை முன் பருவத்திலும், பின்பருவ வகைகளை பின்பருவத்திலும் நடவேண்டும். இரகங்களைப் பருவம் மாற்றி பயிரிடக்கூடாது. ஏக்கருக்கு 275 கிராம் விதை போதுமானது."*

இவ்வாறு செய்வதால் வெடிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

நடவு செய்த 6 வாரங்கள் கழித்து செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

வேருக்குச் சேதம் ஏற்படாதவாறு மண்ணை மேலாகக் கொத்திவிட வேண்டும்.

இரசாயன முறையில் பயிர் செய்வதாக இருந்தால் மருந்துக் கடைகளில் அல்லது விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்படும் கிருமி நாசினிகளையும் உரங்களையும் பயன்படுத்தலாம்.

இயற்கை முறையில் பயிர் செய்வதாக இருந்தால் பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா மற்றும் கிருமி நாசினியான கற்பூரக்கரைசல், வேப்பம் விதை கரைசல், புகையிலைக் கரைசல் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

முட்டைக்கோஸ் நட்ட 75ஆவது நாளில் இருந்து அறுவடைக்கு வரும்.

கடினமான இலைகள் வளர்வது பயிர் முற்றிவிட்டதற்கான அறிகுறி ஆகும்.

ஒன்று அல்லது இரண்டு முற்றிய இலைகளுடன் கூடிய முட்டைக்கோசை அறுவடை செய்யவேண்டும். 120 நாட்களில் சுமார் எட்டு முறை வளர்ச்சியடைந்த முட்டைக்கோசுகளைப் பறிக்கலாம். முட்டைக்கோஸ் நன்றாக வளர்ச்சி பெற்று முற்றாமல் இருக்கும் தறுவாயில் அறுவடை செய்ய வேண்டும்.

இப்பயிரின் விளைச்சல் ஆனது மலைப் பகுதியில் ஏக்கருக்கு 150 நாளில் 20 முதல் 25 டொன்களும்,

சமவெளிப்பகுதியில் ஏக்கருக்கு 120 நாளில் 10 முதல் 16 டொன்களும் கிடைக்கும்.

# மனிதரைப் பதிலீடு செய்யுமா செயற்கை நுண்ணறிவு?

“ டிஜிட்டல் யுகத்தில் மனிதர்களின் மூளை வலிமைக்கு இயந்திரங்கள் சவால் விடுகின்றன. உயிரின உலகத்தை மனிதர்கள் ஆட்சிசெய்வதற்கு அவர்களின் அறிவுத் திறனே காரணம். மனிதர்களின் தனித்துவமான இந்த ஆற்றல், நவீன இயந்திரங்களின் முன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது. ”

அமித் ஜெயின்

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) என்னும் சொல் இன்று பரவலாகப் பல தளங்களில் புழங்கினாலும் அந்தக் கருத்தாக்கம் புதியது அல்ல. செயற்கை நுண்ணறிவு போன்ற அறிவுள்ள இயந்திரங்கள் என்னும் சிந்தனை 1960களிலேயே அறிமுகமாகிவிட்டது. இயந்திரங்களின் அறிவை எப்படி நிரூபிப்பது என்பதுதான் அறிவியலாளர்கள் அன்று எதிர்கொண்ட சவால். செயற்கை நுண்ணறிவின் திறமையைப் பரிசோதிப்பதற்கு மிகச் சரியான விளையாட்டாக செஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது.



### மேம்படுத்தப்பட்ட நுண்ணறிவு

1997இல் ஐபிஎம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு இயந்திரமான ‘டீப் ப்ளூ’ (Deep Blue) உலக செஸ் சாம்பியன் கேரி காஸ்ப்ரோவை செஸ் போட்டியில் தோற்கடித்தது. ஆனால், கேரி இந்தத் தோல்வியால் துவண்டுவிடவில்லை. இயந்திரங்களின் சாத்தியப்பாடுகளைப் புரிந்துகொண்டு மனிதர்களும் கணினிகளும் போட்டிபோடுவதற்குப் பதிலாக, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதன் மூலம் விளையாடப்படும் புதிய செஸ் வடிவத்தை அவர் அறிமுகப்படுத்தினார்.

‘ஃப்ரீஸ்டைல் செஸ்’ (Freestyle Chess) என்றழைக்கப்படும் புதிய செஸ் வடிவம் மனிதர்களும் இயந்திரங்களும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அவர்கள் தனித்தனியாகப் பணியாற்றுவதால் கிடைப்பதை விடச் சிறந்த விளைவுகளை ஈட்ட முடியும் என்பதற்கான உதாரணம்.

மனிதர்களின் அறிவு, இயந்திரங்களின் செயற்கை நுண்ணறிவு இணைந்த இந்தக் கூட்டியக்கமே மேம்படுத்தப்பட்ட நுண்ணறிவு (Augmented Intelligence). மேம்படுத்தப்பட்ட நுண்ணறிவு என்பது மனிதர்களின் அறிவாற்றல் திறன்களை இயந்திரத்தின் உதவியுடன் மேம்படுத்துவதே.


கணினியில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் எம்.எஸ்.வேர்டு உள்ளிட்ட கோப்புகளில் உள்ள உச்சரிப்புப் பிழைகாட்டி (Spell check), மனிதர்களின் மொழித் திறன் இயந்திரத்தின் துணையுடன் மேம்படுத்தப் படுவதற்கான மிக எளிய உதாரணம். வாகன ஓட்டிகள் பயன்படுத்தும் ‘கூகுள் மேப்’கள் ஓட்டுநர்களின் வழிகண்டறியும் திறனை இயந்திரத்தின் துணையுடன் மேம்படுத்துவதாகும்.

### புதிய சவால்கள்

அண்மையில் ‘சாட்ஜிபிடி’ (ChatGPT) மனிதர்களின் கைகளுக்கு அகப்பட்ட சக்தி வாய்ந்த கருவியாக உருவெடுத்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பரில் வடக்கு மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தத்துவப் பேராசிரியர், புர்கா மீதான தடை அறம் சார்ந்ததா? என்பது குறித்த ஒரு மாணவரின் கட்டுரையை, அந்த வகுப்பு மாணவர்கள் எழுதியவற்றில் ஆகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்தார்.

புதிய தகவல்களை உருவாக்குதல், கட்டுரை எழுதுதல், கோட்பாடுகளை விளக்குதல், புதிய கருத்துருக்களை வளர்த்தெடுத்தல் ஆகிய திறன்களை உள்ளடக்கிய ‘சாட்ஜிபிடி’ என்னும் செயற்கை நுண்ணறிவுக் கருவியைப் பயன்படுத்தி அந்தக் கட்டுரையை எழுதியதாகப் பின்னர் அந்த மாணவர் ஒப்புக்கொண்டார்.

‘சாட்ஜிபிடி’ போன்ற கருவிகள் டிஜிட்டல் யுகத்தில் தலைமைப் பொறுப்பு வகிப்போருக்கு முன் எப்போதும் இல்லாத, இதுவரை கண்டிராத சவால்களையும் சாத்தி



யங்களையும் அளிக்கின்றன. தொழிற்புரட்சிக் காலத்தில் மனிதர்களின் உடல் வலிமைக்கும் இயந்திரத்துக்கும் இடையே போட்டி நிலவியதில் இயந்திரமே வென்றது.

டிஜிட்டல் யுகத்தில் மனிதர்களின் மூளை வலிமைக்கு இயந்திரங்கள் சவால் விடுகின்றன. உயிரின உலகத்தை மனிதர்கள் ஆட்சிசெய்வதற்கு அவர்களின் அறிவுத் திறனே காரணம். மனிதர்களின் தனித்துவமான இந்த ஆற்றல், நவீன இயந்திரங்களின் முன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது.

நவீன இயந்திரங்களால் ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு மனிதர்களின் திறன்களை மேம்படுத்த, மனிதர்களின் முக்கியத்துவத்தை நிலைத்து நிற்கவைப்பதுதான் டிஜிட்டல் யுகத்தில், தலைமைப் பொறுப்பில் உள்ளோருக்கு மிகக் கடினமான சவால்.

இந்தப் புதிய உலகத்தை எதிர்கொள்வதற்கு மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்கும் இடையிலான கூட்டியக்கம் வெற்றிச் சூத்திரமாகச் செயல்பட முடியும். தலைமைப் பொறுப்பில் உள்ளோர் தங்களது மனித வளத்தை மேலும் பயனுள்ளதாக்கும் வகையில் அவர்களின் திறன்களை எப்படி மேம்படுத்துவது என்பதில் கவனம் செலுத்தியாக வேண்டும்.

### நேரத்தை மிச்சப்படுத்த..

ஊழியர்கள் தமது வேலை சார்ந்த விவரங்களைக் கையாள்வதற்கான தளங்கள் (Employee Self Service), தொழில்சார்ந்த முகாமைத்துவம், (Project management), நேர முகாமைத்துவம் (Time management), சொத்துக் கண்காணிப்பு (Asset tracking) ஊழியர்களுக்கு இடையிலான தொடர்பாடல் (Internal Communication) ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவு, ஊழியர்களுக்குப் பதிலாக மனிதர்களைப் போலவே வாடிக்கையாளர்களுடன் பேசக்கூடிய சாட்பாட்கள் (Chatbot) ஆகியவை ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான சில உதாரணங்கள்.

மின்னஞ்சல்கள், கடிதங்கள், அறிக்கைகள் உள்ளிட்டவற்றை எழுதுவதற்கும் பெரிய உரைகளைச் சுருக்குவதற்கும் ‘சாட்ஜிபிடி’யைப் பயன்படுத்தலாம். ஊழியர்களால் மிச்சப்படுத்தப்படும் நேரம் நிறுவனத்தால் மிச்சப்படுத்தப்படும் நேரமே.

### நம்பகமானவையா?



ஆனால், ‘சாட்ஜிபிடி’ போன்ற கருவிகளின் வருகை செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திக் கல்விப்புலம் சார்ந்த கட்டுரைகள் அல்லது செய்திக் கட்டுரைகள் எழுதுவது தொடர்பான அறம்சார் கேள்விகளை எழுப்பியுள்ளது. செயற்கை நுண்ணறிவுக் கருவிகளால் திரட்டப்படும் தகவல்கள், எந்த அளவுக்கு நம்பகமானவையாகவும் சார்பற்றவையாகவும் இருக்கும் என்ற கேள்வி உள்ளது.

குறிப்பிட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரியைப் பயிற்றுவிக்கப் பயன்படுத்தப்படும் தரவுத் தொகுப்பின் தரத்தில்தான் இதற்கான விடை அடங்கியுள்ளது. கடந்த மே மாதம் அமெரிக்க வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றத்தில் தனது வாதங்களுக்கு வலுச்சேர்ப்பதற்காக ‘சாட்ஜிபிடி’யால் திரட்டித் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் போலியான வழக்குகளை முன்னிறுத்தி வாதிட்டதற்காக மன்னிப்புக் கேட்டது இங்கே நினைவுகூரத்தக்கது.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தலைமைப் பொறுப்பில் இருப்போரின் வெற்றிக்கான மந்திரம், மனிதர்களின் நம்பகத்தன்மைவாய்ந்த அறிவாற்றலைச்செயற்கை நுண்ணறிவின் துணைகொண்டு மேம்படுத்துவதே. ‘செயற்கை நுண்ணறிவு மனிதர்களைப் பதிலீடு செய்துவிடுமா?’ என்று கேட்கப்படும் கேள்விக்கான விடையை இப்படிச் சொல்லலாம்: “மேம்படுத்தப்பட்ட நுண்ணறிவு மனித அறிவாற்றலைப் பதிலீடு செய்வதற்கான சாத்தியங்கள் அதிகம்”.

# வடக்கே வரும் யானைகள்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

சில நாட்களுக்கு முன், ஓர் இரவுப் பொழுதில் வவுனியா நகரின் மத்தியில் (கண்டி வீதியில்) ஒரு லொறியில் இரண்டு யானைகள் நிற்பதைக் காணமுடிந்தது. மறுநாள் யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில் ஒன்றின் திருவிழாவுக்கு அந்த யானைகள் மகரகம பகுதியில் இருந்து வருகின்றனவாம். இரவு நேரம் என்ற போதும் மக்கள் திரளத் தொடங்க அவர்கள் அந்த லொறியை எடுத்துச் சென்று விட்டனர். இப்படியான பல லொறிகள் வவுனியாவைக் கடந்து அதிகளவில் யாழ்ப்பாணம் போவதை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் பொதுவாகத் தென்பகுதி பௌத்த ஆலயங்களில் தான் யானைகள் பெரஹராக்களில் பயன்பட்ட நிலையில் அண்மைய நாட்களாக பல சைவ ஆலயங்களும் யானைகளைத் தமது திருவிழாக்களுக்கு பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. யானைகளை திருவிழாக்களுக்கு கொண்டு வர இலட்சக்கணக்கில் செலவாகும். புலம்பெயர் தமிழரால் போஷிக்கப்படும் வடக்கின் பல ஆலயங்களுக்கு இந்தச் செலவு பெரிய விடயமல்ல. சில மாதங்களுக்கு முன் ஒரு மரண ஊர்வலத்திற்குக் கூட யானை பயன்பட்டிருந்தது.

இங்கு நான் ஓர் ஆபத்தான விடயத்தை சொல்லப் போகிறேன். தென் பகுதியில் பெரஹராக்களில் யானைகள் பயன்படும் போது அவை கால்நடை வைத்தியர்களால் பரிசோதிக்கப்படும். குறிப்பாக மத (ஆரளவா) நிலை கவனிக்கப்படும். மத நிலைக்கு அண்மித்த யானைகள் நிராகரிக்கப்படும். மன அழுத்தம் கொண்ட, களைத்த யானைகளும் நிராகரிக்கப்படும் என்பதோடு யானைகள் குழப்பமடையும்போது அவற்றைக் கட்டுப்படுத்த ஒரு கால்நடை வைத்தியர் குழாமும் இருக்கும் (Tranquilizing units). தேவையானால் மயக்க மருந்துகள் செலுத்தப்பட்டு யானைகள் கலவரமடைவது தடுக்கப்படும்.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது பல பெரஹராக்களின் Tranquilizing குழுவில் இடம்பெற்றிருக்கிறேன். அப்படி எவ்வளவு பரிசோதனை செய்தும் சில யானைகள் குழம்பும். கலவரமடையும். இப்படியான குழப்பங்களைத் தொலைக் காட்சிகளில் பார்த்திருப்பீர்கள்.

இப்படியிருக்க இங்கு வடக்குக்கு வரும் யானைகள் முறையாகப் பரிசோதிக்கப்படுகின்றனவா? மறுநாள் காலை திருவிழாவுக்கு வரும் யானைகள் இரவு இரவாக பல நூறு கிலோ மீற்றர் வாகனங்களில் கொண்டுவரப்படுகின்றன. இப்படிப் பல நூறு கிலோ மீற்றர் பயணிக்கும் யானைகள் களைத்துத்தான் இங்கு வருகின்றன. எங்கள் திருவிழாக்கள் கடும் வெய்யிலுக்குள் தார் வீதிகளில் இடம் பெறுபவை. யானைகள் அந்தக் கடும் சூட்டால் கலவரமடையலாம். கடும் ஒலிபெருக்கிச் சத்தம் வேறு. மக்கள் கூட்டம் வேறு அதிகமாக இருக்கும். இடையிடையே போடப்படும் கடுமையான பட்டாசுச் சத்தங்கள். இந்த மாதிரியான செயற்பாடுகளால் யானைகள் குழப்பமடையலாம்.

இது தொடர்பாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடக்கு மாகாண பணிப்பாளர் வடக்கின் ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கும் எழுத்து மூல எச்சரிக்கையையும் வழங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. முறையான அனுமதியின்றி பாதுகாப்பும் இன்றி யானைகளைப் பொதுமக்கள் கூடும் இடங்களில் பயன்படுத்துவது சட்ட விரோதம் என வன விலங்குத் திணைக்களமும் கூறியுள்ளது.

இப்படியான நிலையில், தென் பகுதி யானைகள் இப்படி வகை தொகையின்றி எந்த பாதுகாப்பு ஏற்பாடும் இல்லாமல் வடக்குக்கு வருவது எங்காவது ஓர் ஆலய திருவிழாவில் அனர்த்தம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறது.

# நெல் உற்பத்தியை மேம்படுத்த 300 அதிகாரிகளுக்குப் பயிற்சி



ஐக்கிய நாடுகள் சபையினுடைய உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), இலங்கையின் விவசாயத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபையுடன் (MASL) இணைந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) நிதியுதவியுடன், 2021-2022 இல் இரண்டு தொடர்ச்சியான பருவங்களில் மோசமான அறுவடை காரணமாக உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலை காணப்படுவதால் மிகவும் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2022 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி கிட்டத்தட்ட 40% த்தால் வீழ்ச்சியடைந்து இருப்பதால் இலங்கையினுடைய நெல்



சுற்றுச்சூழல் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றதால் இந்த விடயத்தில் உடனடிக் கவனம் தேவைப்படுகின்றது.

இந்தச் சிக்கலை எதிர்த்துப் போராட, FAO ஆனது, ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) 4 மில்லியன் யூரோ நிதியுதவியுடன் RiceUP என்ற தலைப்பில் ஒரு புத்தாக்கத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, அம்பாறை, பதுளை, அம்பாந்தோட்டை மற்றும் பொலன்னறுவை ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவம் (IPNM) தொடர்பான விவசாய விரிவாக்க அதிகாரிகளுக்கு (AEOs) FAO மற்றும் அதன் பங்காளிகள் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

IPNM இல் AEO களின் பயிற்சியானது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள நெல் விவசாயிகளுடன் விவசாயத்தில் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்குத் தேவையான திறன்களையும் அறிவையும் அவர்களுக்கு அளிக்கும். இந்த அலுவலர்கள் விவசாயிகளுக்கு முதன்மையான தொடர்பு மையமாகப் பணியாற்றுவார்கள், IPNM நடைமுறைகளைச் செயல்படுத்துவது குறித்த வழிகாட்டுதலை வழங்குவார்கள், இது மண் முகாமைத்துவம் மற்றும் இரசாயனத்தில் தங்கியிருத்தலைக் குறைக்கும் அதே வேளையில் பயிர் விளைச்சலை அதிகரிக்கக் கரிம மற்றும் இரசாயன உரங்களின் உகந்த பயன்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

IPNM நடைமுறைகள் குறித்த விவசாய விரிவாக்க அதிகாரிகளுக்கான (AEOs) ஆரம்பப் பயிற்சி அமர்வு இன்று பட்டலகொடவில் உள்ள அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து மொத்தம் 300 AEO களுக்குப் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த அமர்வு ஐந்து பயிற்சித் திட்டங்களின் தொடர் தொடக்கத்தைக் குறிக்கிறது. சர்வதேச மற்றும் தேசிய ஆலோசகர்கள், விவசாயத் திணைக்களம், எம்.ஏ.எஸ்.எல் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்ட பயிற்சி கையேடு இந்தப் பயிற்சி அமர்வுகளின் அடித்தளமாகச் செயற்படும்.

IPNM என்பது ஒரு நிலையான நில மேலாண்மை நடைமுறையாகும், இது மண்ணின் தரத்தை உறுதிப்படுத்துகிறது, சிதைவைத் தடுக்கிறது மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்போது பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது. FAO இன் IPNM இன் தூண்டல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதுடன், அத்தியாவசிய உரங்களை அணுகுவதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வாக காணப்படுவதோடு உணவுப் பாதுகாப்பைப் பேணுதல். IPNM மற்றும் யூரியா உரத்தை அணுகுவதன் மூலம், சிறு நெல் விவசாயிகள் செலவுகளைக் குறைத்து உற்பத்தியை மேம்படுத்தலாம், இது சிறந்த இலாபம் மற்றும் எதிர்கால அதிர்ச்சிகளைத் தாங்கும் தன்மைக்கு வழிவகுக்கும்.

உரம் மற்றும் தரமான விதைகளின் பாதுகாப்பான மற்றும் திறமையான பயன்பாடு உட்பட நிலையான விவசாய நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கையின் நெல் விவசாயத் துறையில் உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை RiceUP நோக்கமாகக் கொண்டுள்ளது. FAO தனது பங்காளர்களுடன் இணைந்து, இலங்கையின் விவசாயத் துறையின் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் மீள்தன்மையை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளது.



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

முந்தி நாங்கள் சின்னவயசில விடியக் காலத்தால நித்திரையால எழும்பி கைகால் முகம் கழுவிச் சாமி கும்பிட்ட பிறகு பாடம்படிச்சுப் போட்டு முதல் வேலையா ஆட்டடி மாட்டடி எல்லாம் கூட்டித் துப்பரவாக்குவம். சாணி ஆட்டுப்புழுக்கை எல்லாத்தையும் சாணிக்கிடங்குக்கை போடுவம். முந்தி அநேகமா எல்லா வீடுகளிலையும் உப்பிடி ஒரு கிடங்கு இருக்கும். பள்ளிக்கம் போறதுக்கு முந்தி உந்த வேலையள் எல்லாம் செய்து போடவேணும் எண்டு ஆச்சி கண்டிப்பாகச் சொல்லிப்போடுவா. கிடங்கில இருக்கிற எருவை இடைக்கிடை வண்டில்லை ஏத்திக்கொண்டுபோய் இல்லாட்டில் பெரிய தீவுக்கடகத்தில போட்டு இல்லாட்டில் பசளைப் பையில கட்டித் தலையில வைச்சுக் காவி இல்லாட்டில் சயிக்கிளிலை வைச்சுக் கட்டிக் கொண்டு போய் வயலில கொட்டுவம்.

அதுமாதிரி ஆச்சியும் குந்தி இருந்து கொண்டு கை விளக்குமாத்தால முத்தத்தை முதலிலை இடம்வலமாவும் பேந்து வலம் இடமாவும் கூட்டுவா ஆச்சி அப்பிடிக் கூட்டுறதே ஒரு தனி வடிவு. அப்பிடிக் கூட்டின முத்தத்தில விளக்குமாத்து அடையாளம் வரிவரியா அரைவட்டங்களா ஒரு கோட்டுச்சித்திரம் மாதிரி இருக்கும். ஆச்சி முத்தம் கூட்டினா எண்டால் அதில சோறு போட்டுச் சாப்பிடலாம் எண்டு அப்பு சொல்லுவார். உப்பிடி குந்தி இருந்து முத்தம் கூட்டிறது கை கால் இடுப்பு வயிறு நெஞ்சு எல்லாத்துக்கும் நல்ல பயிற்சி கண்ட வருத்தம் வாதை ஒண்டும் வராது எண்டுவா ஆச்சி . ஆச்சி சொல்லுறது உண்மைதான். உப்பிடி வீட்டு வேலையள் செய்யிறதாலைதான் அந்தக காலத்துப் பெண்டுகள் வருத்தம் வாதை ஒண்டும் இல்லாமல் இருந்தவை. இப்பத்தே பெண்டுகள் மாதிரி நாப்பது வயதிலேயே வீட்டுக்குத் தூரம் நிண்டு அங்கை பிடிக்குது இஞ்சை இளுக்குது எண்டு அல்லோலகல்லோலப்படேல்லை.

கிழமையில ஒரு நாளைக்கெண்டான்ன வளவு முழுக்க வீட்டிலை உள்ள எல்லாரும் சேர்ந்து கூட்டி வயலுக்குப் போடக்கூடிய குப்பை கூழங்களைக் குப்பைக்கிடங்கில போட்டிட்டு மிச்சத்தைக் கொழுத்துவம். அப்பிடியே ஒண்டைவிட்டு ஒரு கிழமை வீட்டையும் கழுவுறதோட குசினி தலைவாசல் வீட்டுக்கை இருக்கிற மண் அறை எல்லாம் ஆச்சி சாணியால மெழுகுவா. ஆச்சி நெடுகவுஞ் சொல்லுற விசயம் வீடு வாசல் துப்பரவா இருந்தாத்தான் ஆக்களின்ரை மனம் துப்பரவாயிருக்கும். இப்பிடி வீடு வாசலும் மனமும் துப்பரவாயிருந்தா ஆக்களுக்கு வாதை வருத்தம் ஒண்டும் வராது. இலட்சுமியும் குடியேறி சந்தோசமா இருப்பா எல்லாச் செல்வமும் கிடைக்கும் எண்டு சொல்லுவா. அதை மாதிரி எங்கட வீடு வாசல் மட்டுமில்லை எங்கட வீட்டைச் சுத்தி வெளியில ஒழுங்கையள் பொது இடங்கள் கோயில் குளங்கள் கடக்கரையள் கேணியள் கிணறுகளையும் நாங்க துப்பரவா வைச்சிருக்க வேணும் எண்டிறது ஆச்சி சொல்லுற இன்னொரு விசயம் .



எங்கும் எதிலும் இருக்கிற எங்கட சிவபெருமான் உப்பிடியான எல்லா இடங்களிலும் இருக்கிறார் எண்டது விளங்க வேணும். அதால உந்த இடங்களையும் கடவுள் இருக்கிற இடம் எண்டபடியால துப்பரவா வைச்சிருக்க வேணும் எண்டுவா. இப்பிடி உந்தப் பொது இடங்களை எல்லாம் சிவபெருமான் இருக்கிறதா நினைச்சுத் துப்பரவா வைச்சிருக்கிறதைத்தான் சரியைத்தொண்டு எண்டு எங்கட சமயம் சொல்லுது எண்டது அவவின்ரை சமய நம்பிக்கை. இப்பிடிப் பொது இடங்களை சுத்தமா வைச்சிருக்கிறதுதான் கடவுளுக்குச் செய்யிற உண்மையான தொண்டு எண்டுவா. உந்த நம்பிக்கையில இருந்துதான் சிரமதானம் எண்ட பொதுத் தொண்டு வேலையள் வந்தது எண்டும் சொல்லுவா.

உப்பிடி உந்த ஊரில இருக்கிற எல்லா இடங்களும் துப்பரவா இருந்தால் ஊருக்குள்ள கெட்ட கிருமியள் ஒண்டும் வராது ஆக்களுக்கும் வருத்தம் வாதை ஒண்டும் வராது. ஊரும் சீராயும் சிறப்பாயும் இருக்கும். வருத்தம் இல்லாத வாழ்க்கை தான் ஒரு மனுசனுக்கு வேணும் எண்டுவா. சும்மா விளக்கம் இல்லாமலே எங்கட பழைய ஆக்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எண்டு சொன்னவை எண்டுவா. உங்க சோறு கறி தின்னுற மாதிரி குளுசையளை வாங்கித் தின்னுறவையைக் கேட்டா அவை உந்த நோயில்லாமல் இருக்கிறது எவ்வளவு பெரிய செல்வம் எண்டு வலு திறமான விளக்கம் சொல்லுவினம் எண்டுவா.

உப்பிடி வீடுவாசலைத் தங்கட வீட்டைச் சுத்தி இருக்கிற இடங்களைக் கூட்டுறது துடைக்கிறதே ஒருத்தருக்கு நல்ல பயிற்சி உதாலயே கன வருத்தங்கள் வராது எண்டுவா ஆச்சி. முந்தி நாங்கள் எங்கட ஒழுங்கையை ஒவ்வொரு நாளும் கூட்டித்துப்பரவாக்கிக் கொழுத்தக்கூடிய குப்பையைக் கொழுத்திப் போட்டு மிச்சத்தை குப்பைக்கிடங்கில போடுவம். அது உக்கி நல்ல பசளையா வரும். கொண்டே வயலுக்கை போடுவம். ஆச்சி நெடுகவும் ஒருத்தன் குப்பை எண்டு கழிச்சு விடுறது இன்னொருத்தனுக்குப் பிரயோசனம் எண்டுவா. இப்ப கனபேருக்குத் தங்கட வீடு வாசலைக் கூட்டுறதே பெரிய பஞ்சி. அப்பிடிக் கூட்டித் துப்பரவாக்க ஆக்களைக் கூலிக்குப்பிடிப்பினம். அப்பிடி வேலைக்கு ஆக்கள் வரேல்லை எண்டால் வீடு வாசல் அப்பிடியே குப்பை கூழமாக்கிடக்கும். உப்பிடி இருந்தால் பேந்துகிருமி வந்து நோய்வராம வேற என்ன வரும்.

இன்னும் சிலர் தங்கட ஒழுங்கையளைக் கூட்டுறது துடைக்கிறதைக் கவுரவப்பிரச்சினையா நினைப்பினம். ஒரு நாளும் கூட்டாயினம் துடைக்காயினம். அதுக்குள்ளாலயே மணக்குது குடையுது எண்டு குறை மட்டும் சொல்லிக் கொண்டு போவினம் வருவினம். இப்பிடி குறை சொல்லாமல் அவை உதை ஒரு சிரமதானமாச் செய்தினம் எண்டால் அவையின்ரை இடம் எவ்வளவு துப்பரவாய் இருக்கும் ஆனாச் செய்யாயினம். இன்னுஞ்சிலரில என்னனண்டால் குப்பையைச் சாப்பாட்டுக் கழிவுகளை பையளிலை கட்டிக்கொண்டு போய் மற்றவன்ரை படலைக்கு முன்னால வைக்கிறது இல்லாட்டில் ஒழுங்கை முகரியளில வைக்கிறது இல்லாட்டில் ஆற்றையும் வெறு வளவுகளுக்கை எறியிறது எண்டு கன கெட்ட பழக்கங்கள் இருக்குது. உப்பிடிக் கொட்டின குப்பைப் பையளை றோட்டு வழிய நிக்கிற நாய், பூனை, காகங்கள் பிச்சுக் கொத்திக் குதறி அந்த இடங்கள் எல்லாத்தையும் நாறடிச்சுப்போடுங்கள்.

உப்பிடிப் பொது இடங்களிலை குப்பை கொட்டுற ஆக்களை குப்பையளை விட மோசமான குப்பையள் எண்டு ஆச்சி திட்டுறவா. ஒவ்வொருத்தனும் தன்ரை வீட்டை மாதிரி சுத்தி இருக்கிற இடங்களையும் துப்பரவா வைச்சிருப்பான் எண்டால் அதுதான் அவன் தன்ர சமூகத்துக்குத் தன்ர ஊருக்கு தன்ர நாட்டுக்குத் தான் நம்புற கடவுளுக்குச் செய்யிற பெருந் தொண்டு எண்டு ஆச்சி சொல்லுவா. அப்பிடியானவனுக்குக் கடவுளின்ரை அருள் எப்பவும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கிடைக்கும் எண்டுவா.



(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

10. தொழில்முனைவு

11. பொழுதுபோக்கு

12. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்

13. நிலையான வளர்ச்சி

14. குடியிருப்புச் சமூகத்தின் குடியேற்றத்தில் நகர்ப்புற வசதி நடவடிக்கைகள்

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகத் தகுதி பெற அங்கீகரிக்கப்பட்ட நபர் பின்வரும் அளவு கோல்களில் ஏதேனும் ஒன்றினைப் பூர்த்தி செய்யவேண்டும்:

a) அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அவரது தலைமை நிறுவனத்தின் வருடாந்திர உலகளாவிய வருவாய் $50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்க வேண்டும்.

b) கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் 5 வருடங்களுக்குள் குறைந்தபட்சம் 100 ஊழியர்களைப் பணியமர்த்த வேண்டும்.

c) உரிமம் பெற்ற 5 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் $500,000 நிறுவன மதிப்பீட்டைக் கொண்ட தொடக்க அல்லது வளர்ச்சி நிலை வணிகம்.

d) புத்தாக்கம், அறிவுப் பரிமாற்றம், தொழில்நுட்ப பரிமாற்றம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அல்லது கொழும்புத்துறைமுக நகரத்திற்குள் சர்வதேச நிதி மையத்தை உருவாக்குவதற்கான உத்வேகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்கு வணிகம் பங்களிக்கிறது என்பதை ஆணைக்குழுவிடம் நிரூபிக்க வேண்டும்.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகங்கள் என வகைப்படுத்தப்பட்ட வணிகங்கள் கீழே உள்ள இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்டுள்ள வரிச் சட்டங்களால் வழங்கப்படும் விலக்குகள் அல்லது சலுகைகளுக்குத் தகுதியுடையவை. இந்தச் சலுகைகள் வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்குப் பொருந்தும்.

குறிப்பு: ஒழுங்குமுறை விதிகளின் கீழ் விலக்குகள் மற்றும் ஊக்கத்தொகைகளைப் பெறுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட நபரை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வணிகமாகவோ அல்லது மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகவோ வெளியிடப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் நியமிக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் குறிப்பிடுகின்றன.

**இணைப்பு 1**

1. The Inland Revenue Act, No. 24 of 2017 - உள்நாட்டு இறைவரிச் சட்டம், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கம்

2. The Value Added Tax Act, No. 14 of 2002 - பெறுமதி சேர் வரிச் சட்டம், 2002 இன் எண். 14

3. The Finance Act, No. 11 of 2002 - நிதிச் சட்டம், 2002 இன் எண். 11

4. The Finance Act, No. 5 of 2005 - நிதிச் சட்டம், 2005 இன் எண். 5

5. The Excise (Special Provisions) Act, No. 13 of 1989 - கலால் (சிறப்பு விதிகள்) சட்டம், 1989 இன் எண். 13

6. The Customs Ordinance (Chapter 235) - சுங்கச் சட்டம் (அத்தியாயம் 235)

7. The Ports and Airports Development Levy Act, No. 18 of 2011 - துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரிச் சட்டம், 2011 இன் எண். 18

8. The Sri Lanka Export Development Act, No. 40 of 1979 - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம், 1979 இல, 40

9. The Betting and Gaming Levy Act, No. 40 of 1988 - பந்தயம் மற்றும் கேமிங் லெவி சட்டம், 1988 இன் எண். 40

10. Termination of Employment of Workmen (Special Provisions) Act, No. 45 of 1971 - வேலையாட்களைப் பணிநீக்கம் செய்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், 1971 இன் எண். 45

11. The Entertainment Tax Ordinance (Chapter 267) - கேளிக்கை வரி ஆணை (அத்தியாயம் 267)

12. The Foreign Exchange Act, No. 12 of 2017 - அந்நியச் செலாவணிச் சட்டம், 2017 இன் எண். 12

13. Casino Business (Regulation) Act, No. 17 of 2010. - கேசினோ வணிக (ஒழுங்குமுறை) சட்டம், 2010 இன் எண். 17.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com












# களைகட்டுகிறது யாழ். அல்லங்காடிக் கொண்டாட்டம்








யாழ்ப்பாணம் முற்றவெளிப் பண்ணைச் சுற்றுவட்டத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையிலும் மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நடைபெறும் "அல்லங்காடிக்கொண்டாட்டம்" இப்போது களைகட்டத் தொடங்கியுள்ளது. விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ள அதேவேளையில், வருகைதரும் மக்களின் தொகையும் பெருகிக்கொண்டுள்ளது.

வருகைதருவோரை மகிழ்விப்பதற்காக இசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சைவ, அசைவ உணவுகள், உடைகள், உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் எனக் களைகட்டியுள்ளது யாழ். அல்லங்காடி கொண்டாட்டம்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2023இல் வெளியிடப்பெற்றது.